# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 — விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, புரட்டாதி 28 உ (14-10-73) ஞாயிறு நமழா:ஆகிர் 16 —புத்தகம் 27 இதழ் 7


## கெனமனின் வாயை அடக்கினர் செல்லத்தம்பு!!

தமிழர் கூட்டணி அக்டோபர் 2ல் நடத்திய தபால் சட்ட மறுப்பு பற்றி தேசிய பேரவையில் அவதூறு கிளப்பிய அமைச்சர் பீட்டர் கெனமனுக்கு தமிழர் கூட்டணி பா.உ.க்களான திரு வாளர்கள் செல்லத்தம்பு, தர்மலிங்கம் வி. என். நவரத்தினம் ஆகியோர் சுடச் சுடப் பதிலடி கொடுத்தனர்.

'தமிழரசுக் கட்சிக்காரர்கள் புத்திசாலிகள்—அதனுல்தான் அவர்கள் சட்டத்தை மீறி அனுப்பிய கடிதங்களில் புரளி செய்திருக்கின்றனர். தங்கள் பெயர்களை அதில் அவர்கள் போடாததுமட்டுமன்றி-இப்படி அனுப்பப்



பட்ட கடிதத்தில் வி. பொன்னம்பலம், துரையப்பா ஆகியோர்களின் பெயர்களும் போடப்பட்டிருந்தது' என்று பீட்டர் கெனமன் கூறிய சமயம் கொதித்து எழுந்தனர் தமிழர் கூட்டணி பா. உ.க்கள்!

'இப்படிச் செய்யக்கூடியவர்கள் நீங்கள்தான்; நாங்களல்ல—' என்று முழங்கினர் உடுவில் பா. உ.

'நீங்கள் இப்படிக் கூறுவீர்கள் என்று தெரிந்துதான் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்ட தொண்டர்களின் பெயர், 'முகவரிகளைமுன்கூட்டியே பிரதமருக்கு அனுப்பி வைத்துவிட்டோம்' என்று தம் சிம்மக்குரலில் ஆவேசமாக முழங்கினர் திரு. செல்லத்தம்பு.

இதன்பின் பீட்டர் கெனமனின் முகத்தில் ஈயாடவில்லை;

## மன்னாரில் எண்ணெய்க் கிணறு தோண்டும் வேலைகளுக்கு

# வெளியூரிலிருந்து சிங்களவர் குவிப்பு!

# உள்ளூர் தமிழ்மக்கள் வேலையின்றி தவிப்பு!

## தமிழ் நிலத்தை அபகரிக்கும் சதியாவென கொதிப்பு!

மன்னார்ப்பகுதியில் எண்ணெய்க்கிணறுகள் தோண்டும் வேலையுடன் மறைமுகமாக அங்கு சிங்களக் குடியேற்றத்தையும் நடத்துவதற்கு அரசு திட்டமிடுகிறதா என்ற கேள்வி மன்னர் மாவட்டத்து தமிழ் பேசும் மக்களிடையே எழுந்துள்ளது.

இலங்கையில் ரஷ்ய நிபுணர்களால் நடாத்தப்பட்ட மண்ணெய் ஆராய்ச்சியின் பயனக மன்னார்ப் பகுதியில் மண்ணெய் இருப்பதாக உறுதிசெய்யப்பட்டது யாவரும் அறிந்ததே.

மண்ணெய்க் கிணறுகள் தோண்டி உற்பத்தி வேலை மேற்கொள்வதற்காக கடந்த சில வாரங்களாக பெரும் எந்திர சாதனங்களும் உபகரணங்களும் மண்ணெய் (பெற்றேலியம்) கூட்டுத்தாபனத்தாரால் மன்னரில் கொணடுவந்து குவிக்கப்படுகின்றன. இந்த எந்திர சாதனங்களுடன் படிப்படியாக சிங்கள வேலையாட்களும் வந்துகொண்டிருக்கின்றனர்.

இந்த உற்பத்தி வேலைத் திட்டத்துக்கான சகல ஊழியர்களும் (கூலியாட்கள் உட்பட) சிங்கள நாட்டிலிருந்தே வருவிக்கப்படுவர் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

எந்த ஒரு மாகாணத்திலோ மாவட்டத்திலோ ஒரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்போது உள்ளூரிலுள்ள தொழிலற்ற மக்களுக்கு தொழில் வாய்ப்புக் கொடுப்பதுதான் இதுகாலவரையும் இருந்து வந்த வழக்காகும். மன்னார்ப்பகுதியில் நூற்றுக்கணக்கான படித்த வாலிபர்களும் சாதாரண மக்களும் வேலையின்றிக் கஷ்டப்படுகிறார்கள். அப்படியிருக்க இந்த வேலைத்திட்டத்திற்கு கெடுபிடியாக சிங்கள மக்களைத் தருவிப்பது அரசாங்கத்தின் திட்டவட்டமானகுடியேற்றமேயல்லாது வேறு ஏதாக இருக்கமுடியுமென்று மன்னர் மக்கள் மனம் குமுறுகிறார்கள்.

மண்ணெய் உற்பத்தி ஒரு நிரந்தரமான வேலைத்திட்டமாகும். இத்திட்டத்தில் வேலைசெய்யப்போகும் ஊழியர்கள் மன்னரில் நிரந்தரமாக வதியப்போகிறார்கள். அவர்களுக்கு நிரந்தர வதிவிடங்களை அரசாங்கமே அமைத்துக்கொடுக்குமென்றும் அறிய வருகிறது. அப்படியாயின் அவர்களின் பிள்ளைகள் கற்பதற்குப்பாடசாலை (சிங்கள பௌத்த).

(5-ம் பக்கம் பார்க்க)

## காசி ஆனந்தன் சிறையில் 500வது நாள்

### கண்டனக் கூட்டம்

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் நீதி விசாரணை ஏதுமின்றி சிறையிலடைக்கப்பட்டு 22-10-73ம் திகதியுடன் 500 நாட்கள் நிறைவுறுகின்றன.

ஐநூறு நாட்களாக உணர்ச்சிக்கவிஞரை விசாரணையின்றிச் சிறையிலடைத்து வைத்திருக்கும் அரசின் கொடூர செயலை கண்டித்து 21-10-73 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் கண்டனக் கூட்டமொன்றை நடத்த அளவெட்டி மல்லாகம் தமிழர் கூட்டணிக்கிளையினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

வழக்கறிஞர் மு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தமிழர் கூட்டணித்தலைவர்கள் உரையாற்றுவதுடன், காசி ஆனந்தனின் வாழ்க்கை வரலாற்றை வில்லுப்பாட்டில் இசைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காசி ஆனந்தனை மையமாக வைத்து உலகத்தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. சனர்த்தனம் அவர்களால் எழுதப்பட்ட 'இலங்கை மீண்டும் எரிகிறது' நாடகமும் இவ்விழாவில் ஒலிபரப்பப்படும்.

## பிரதமர் நேரடியாக அழைத்தால் பேச்சுவார்த்தைக்கு நாம் தயார்!

### கூட்டணி நிலை குறித்து அமிர் விளக்கம்!

'பேச்சு வார்த்தைகளின் மூலம், தமிழ் தேசிய இனத்தின் சுயமரியாதைக்கு பங்கம் ஏற்படாத வகையில் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள தமிழர் கூட்டணி எப்போதுமே தயாராக இருக்கிறது.

'1972ம் ஆண்டு ஜூன் 25ந் திகதி பிரதமருக்கு தமிழர் கூட்டணி ஆறு அம்சக் கோரிக்கையொன்றை தமிழ் தேசிய இனத்தின் சார்பில் அனுப்பிவைத்து—இக்கோரிக்கைகள் பற்றி அறிவித்திருந்தது. ஆனல் பிரதமரிடமிருந்து நாம் நீட்டிய நேசக்கரத்துக்கு ஆதாரமாக எந்த வித பதிலும் இன்றுவரை வரவில்லை. 'கடிதம் கிடைத்தது' என்று மட்டுமே பதில் வந்தது.

'1972 செப்டம்பர் 30ந் திகதிக்கு முன்னர், தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கை பற்றி பிரதமருக்கு கூட்டணித் தலைவர் செல்வா நினைவூட்டி கடிதம் ஒன்றும் அனுப்பினர். அதற்கும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இதன் பின்னரே சட்டமறுப்பு இயக்கத்தில் நாம் இறங்கினேம்.

'இந்த நிலையில், பேச்சு வார்த்தை மூலம், தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள விரும்பினல்—அது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு பிரதமரின் கரங்களிலேயே தங்கியிருக்கிறது.

அரசாங்கம் எந்த சந்தர்ப்பத்திலும் எம்மை பேச்சுவார்த்தைக்கு இதுவரை அழைக்கவுமில்லை — அப்படி அழைத்து நாம் அதை நிராகரித்ததுமில்லை.

'பேச்சுவார்த்தைக்குவரும்படி நேரடியாக தமிழர்கூட்டணியிடம் பிரதமர் இன்று கூட அழைப்பு விடுவாரானல்,நாம் பேச்சுவார்த்தைக்கு செல்லத் தயாராகவே இருக்கிறேம்.'

இவ்வாறு தமிழர்கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சுதந்திரனுக்கு அளித்த பேட்டியொன்றின்போது தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியின் போது—42 தமிழ் இளைஞர் சிறை சென்றதும், தந்தை செல்வா பதவிதுறந்து காங்

(5-ம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் வித்தியானந்தன் இலங்கைக் கிளையின் புதிய தலைவர்

### தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு துரிதமான ஏற்பாடுகள்!

அனைத்துலக தமிழாராய்ச்சிக்கழக இலங்கைக் கிளையின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள பேராசிரியர் சு. வித்தியானந்தனின் தலைமையின் கீழ் எதிர்வரும் சனவரி மாதம் 3ம் திகதி முதல் 9ஆந் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.



மகாநாட்டிற்கு அரசியல் வர்ணம் பூச எண்ணியிருந்த

(5-ம் பக்கம் பார்க்க)

## கண்ணதாசன் எழுப்பிய கோஷங்கள்!

அக்டோபர் 3ந் திகதி சென்னையில் இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போருக்கு ஆதரவு தெரிவித்து கவியரசு கண்ணதாசன் தலைமையில் உலகத் தமிழ் இளைஞர் பேரவை நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது கண்ணதாசனும் மற்றவர்களாலும் எழுப்பப்பட்ட கோஷங்கள் வருமாறு:-

'உலகத் தமிழனே
ஒன்றுபடு!
ஈழத் தமிழனுக்காக
குரல் கொடு.'

ஃ

உகண்டாவில் தலையிட்ட
இந்திராவே!
இலங்கைப்பிரச்சினையில்
தலையிடு!

ஃ

பங்களாதேஷ்
பிரச்சினையை
தீர்த்த மத்திய அரசே!
இலங்கைத்
தமிழருக்காக
கவனத்தைத்திருப்பு!

ஃ

'இலங்கை அரசே!
தமிழருக்கு சம உரிமை
வழங்கிடு!
இன்றேல்
ஈழத் தமிழ் நாடு
அமையும்!'

ஃ

'சிறிமாவோ
பண்டாரநாயகாவின்
ஏதேச் சாதிகாரம்
ஒழிக''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர்களை பட்டினிபோட்டுகொல்வதா?

நமது நாட்டு விவசாயிகளை பாட்டாளிகளை மந்திரத்தால் மாங்காய் பெறச் செய்ய நிர்ப்பந்தித்திருக்கிறது இன்றைய ஐக்கிய முன்னணி அரசு.

உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று பிரதமரும், அமைச்சர்களும்; வானொலியிலும், பத்திரிகைகளிலும் வேண்டுகோள் விடுத்து வந்தார்கள். மக்களும் நாட்டை எதிர்நோக்கும் உணவுப் பஞ்சத்தைப் போக்க தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றி வருகின்றார்கள். இப்பொழுதுதான் அவர்கள் மரவள்ளியையும் வற்றாளையையும் நட்டு வருகின்றார்கள். வயல்கள் உழுது விடப்பட்டிருக்கின்றன. இனித்தான் அவர்கள் நெல் விதைக்கும் காலம். நெல்லை விதைத்து அது பயன் தர இன்னும் ஆறு மாத காலம் செல்லும்.

அதற்குள் மின்னல் முழங்காமல் திடுதிப்பென்று அரிசியை அரைக்கொத்தாகக் குறைத்திருப்பதும், மாவில் கைவைத்திருப்பதும் மக்களைப் பட்டினிபோடும் தந்திரமாகவே இருக்கின்றது.

## இரண்டு நாட்களுக்கே போதும்

அரசாங்கம் வானொலியிலும், பத்திரிகைகளிலும், மேடைகளிலும், உணவுற்பத்தியைப் பெருக்குவதை விட்டு மந்திரி பிரதானிகளும் மற்றையோரும் வயலில் இறங்கி வேலை செய்து நாட்டு மக்களுக்கு முன் மாதிரியாக விளங்கி, விவசாயம் செய்பவர்களுக்கு, வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து, பின்னர் இப்படிச் செய்திருந்தால் நாட்டு மக்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்று வாழா இருக்கலாம்!

வாரத்திற்கு ½ கொத்தரிசியே தரப்படுகிறது. அப்படியானால் $1\frac{1}{2}$ சுண்டு அரிசிதான்கிடைக்கும் வயிற்றைக் கட்டிச் சாப்பிட்டாலும் இரு நாட்களுக்கேபோதுமானது. இது மிகுதி நாட்களை உழைப்பாளி, இந்த நாட்டின் தொழிலாளர்களில் பதினெட்டுச் சத விகிதத்தினராகிய தொழிலாளர்—என்ன செய்வது?

1968ல் அரசாங்கத்தில் வேலை செய்யும் நாளாந்த ஊழியர் சம்பளம் 63 சத விகிதம் உயர்ந்தது ஆனால் தோட்டத் தொழிலாளிக்கு உயர்ந்த சம்பளமோ 27 சத விகிதம் தான்.

## தோட்டத்தொழிலாளி நிலை

அக்டோபர் முதல் 400 ரூ.வுக்குக் குறைவாகச் சம்பளம் எடுப்போருக்குப் பத்து சத விகித சம்பள உயர்வு

## அரிசி, மா வெட்டால் பெரும் பாதிப்பு மலையகத் தமிழனுக்கே!

### தொழிற் சங்கத் தலைவர்கள் என்னசெய்யப் போகிறார்கள்

கொடுக்கப்பட்டுள்ளது: இது தோட்டத் தொழிலாளிக்குக் கொடுபடவில்லை. அன்று ஒரு றாத்தல் பாணை மலையகத்தில் 49 சதத்திற்கு வாங்கியவன் இன்று 76சதத்திற்கு வாங்க வேண்டியுள்ளது. அவனால் எப்படிக் கட்டுபடியாகும்!

வெங்காயத்தை, மிளகாயை, கிழங்கை செய்யாது தடுத்தார்கள். அவை மனிதனுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள் அன்று. அவற்றை உற்பத்தி செய்து சமாளிப்பது வேறு. அரிசியை உற்பத்தி செய்து சமாளிப்பது வேறு.

அரிசி அன்றாடத் தேவைக்குரியது. ஒரு நேரமாயினும் அரிசி உணவையோ மாவையோ சாப்பிடத்தானும் இன்று முடியவில்லை. இதனால் பசி, பட்டினி, பிணி, களவு, கொள்ளை, கொலைதான் மிஞ்சப் போகின்றது 'உண்பது இருபொழுதொழிய முப்பொழுது உண்ணோம்' என்று புலவர் ஒருவர் பாடினார்; ஆனால் எமது அரசாங்கம் ஒரு பொழுது உண்பதற்கே இருந்த வழியையும் அடைத்து விட்டது.

உலக வங்கியிடம் ஒரு முறைக்கு. இருமுறை காவடி தூக்கி, வெறுங்கையுடன் 27-9-73 அன்று இரவு வந்த எமது தங்கமூளையான நிதி அமைச்சர் 28ந் திகதி நாட்டு மக்களை திரிசங்கு சொர்க்க நிலையில், மிகப்பெரிய அந்த காரத்தில் தள்ளி விட்டிருக்கின்றார்.

இதனால் உடனடியாக அதிகம் பாதிக்கப்படுபவர்கள் நடுத்தர வகுப்பாராகும். வெளியிடங்களில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஹோட்டல்களில் இனிச் சாப்பாடு இருக்காது. ஹோட்டல்களில் சோறு வேண்டாம் என்று அரசாங்கமே பகிரங்கமாகச் சொல்லி வருகின்றது. ஹோட்டல்காரனுக்கு மாவு இல்லை பலகாரம் தேடுவதற்கு மரவள்ளியோ, வற்றாளையோ தானும் இல்லை, வேகும் வயிற்றைத் தணிப்பதற்கு. இந்த லட்சணத்தில் கடைகளில் எதுவுமில்லையானால் அவர்கள் எதனைச் சாப்பிடுவது?

### பொலிடோல் தஞ்சம்

இந்த நிலையால் எத்தனையோ தொழிலாளர்கள் ஹோட்டல்களிலும், தேனீர் கடைகளிலும் வேலை செய்தோர் வீட்டுக்குஅனுப்பி வைக்கப்படப்போகிறார்கள். வேலையின்றி வெறும் வயிற்றுடன் வீட்டுக்குச்செல்லும் அவர்கள், பசிபட்டினியால் 'பொலிடோலை' தஞ்சமடைய வேண்டியவர்களாக இந்த அரசு மறைமுகமாக அவர்களைத் தூண்டுகிறது.

வயலிலோ, தோட்டங்களிலோ வேலை செய்யவும் சக்தி வேண்டும். அந்த உழைக்கும் சக்தியைப்பெறுவதற்கு உணவு வேண்டும். உணவில்லாமல் மண்வெட்டியை எடுத்து நிலத்தை வெட்ட முடியாது. இதனால் விவசாயமே பெரிதும் பாதிக்கப்படவேண்டிய காலகட்டத்திற்கு அரசின் நடவடிக்கை வழிவகுக்கின்றது.

### மலையகத்தான் நிலை!

மலையகத்தைப்பொறுத்தளவில் அங்கு வாழும் பதினைந்து லட்சத்திற்கு மேலான பாட்டாளி வர்க்கம் தேயிலைத்தோட்டத்திலும், றப்பர் தோட்டத்திலும் வேலை செய்கிறது. அவர்கள் இருக்கும் லைன்களை விட விவசாயம் செய்ய ஒரு துண்டு நிலம்தானும் கிடையவே கிடையாது. தோட்ட நிர்வாகம் கொடுக்கும் அற்ப சொற்ப பணத்தைக் கொண்டு ரொட்டியும், பாணும் சாப்பிட்ட மக்கள், இன்று ரொட்டிக்கு ஆலாய்ப் பறக்கவேண்டியுள்ளது.

பாணுக்கு பேக்கரி வாசல்களில் நடுச்சாமம் சென்று கியூவில் இருக்கவேண்டும். அதுவும், கியூவில் நின்றாலும் ஆளுக்கு ஒரு றாத்தல் பாண் தான் கிடைக்கின்றது. பத்துப்பிள்ளைகள் உள்ள குடும்பத்திற்கு ஒரு றாத்தல் பாண் எந்த மூலைக்கு. ஆளுக்கு ஒரு றாத்தல் பாணையே பேக்கரிக் காரர்கொடுக்கிறார்கள். அப்படியானால் ஒரு குடும்பத்திற்குத்தேவையான பாணை தேவையான அத்தனைபேரும் கியூவில் கால்கடுக்க, நின்று வாங்கவேண்டும். தினமும் பாண்வாங்க அவர்களிடம் பணம் ஏது?

### பட்டினிச் சாவு

இப்பொழுதே பாடசாலைக்கு வரும் மாணவர் வரவு குறைவாக இருக்கின்றது. பாடசாலைக்கு வந்தாலும், விரைவில் வீடுசெல்ல முனைகிறார்கள், காரணம் கேட்டால் மா பிடிக்க, அரிசி பிடிக்க, பாண் வாங்க வென்று சொல்கிறார்கள். இனி அவர்கள் பாடசாலை வருவதை விட்டு பாண் கியூவில் நிற்கவேண்டியதுதான்!

இன்று மலையகத்தொழிலாளிக்கு மாதச்சம்பளம் கேட்டு வருகிறார்கள். கிழமைக்கு இருநாட்கள், மூன்று நாட்களுக்கே வேலை வழங்குகிறார்கள். மாதச் சம்பளம் கிடைத்தாலாயினும் அவர்கள் மாவையோ, அரிசியையோ கள்ளச்சந்தையில் பெற்றுக்கொள்ளலாம். அவர்களுடைய தேவைக்கு மா, அரிசி போன்றவற்றைத்தோட்ட நிர்வாகங்களே கொடுத்து சம்பளத்தில் கழித்துக்கொள்ளுகின்றன.

இனி அவர்கள் நிலை என்ன? ஆளுக்கு அரைக் கொத்தரியும், ஒரு றாத்தல் மாவும் என்றால் மிகுதித் தேவைக்குப் பணத்திற்கு எங்கே போவது? பட்டினி கிடந்து சாகவேண்டியதுதானா? மலை

### புத்தொளி

யகப் பாட்டாளியை கொல்லாமலே கொல்லவா இந்த அரிசி, மாவு வெட்டை அரசு அமுலுக்குக் கொண்டுவந்திருக்கின்றது. மலையகத்தொழிலாளியின் வயிற்றில் மண்ணையல்ல, பெரும்பாறுங்கல்லைப் போட்டிருக்கின்றது இந்த அரசு.

அவர்கள் இதுவரை விவசாயம் செய்யவாய்ப்பற்றிருந்தார்கள். இனி விவசாயம் செய்ய நிலம் வழங்கினால்தான் அவர்கள் மலையகத்தில் மூன்று வேளை அல்ல ஒரு வேளை உணவையாயினும் உண்ண வசதியேற்படும். அதுவரை அவர்களுக்குவேண்டிய அரிசியையும், மாவையும் வழங்கவேண்டியது அரசின் கடமை. இதனை இன்றே, இப்பொழுதே செய்யாவிட்டால், அவர்கள் பட்டினிச் சாவை எதிர்பார்க்க அரசு தயாராக இருக்கின்றது என்பதுதான் அர்த்தமாகும்.

அரசாங்கம் 1969/70ம் வருட சமூக பொருளாதார மதிப்பீடு எடுத்தபொழுது சராசரி 5-2 அங்கத்தவர் கொண்ட தோட்டக் குடும்பத்தின் மாத வருவாய் ரூபா 211 என்றும் ஆனால் அக்குடும்பத்தின் செலவு ரூபா 254 ஆக இருப்பதாக இருந்தது. மாதம் மேலதிகமாக ஒரு குடும்பத்திற்கு ரூபா 43 தேவையாக இருந்தது.

இன்றோ மூன்றாண்டுகளின் பின் இன்றைய விலைவாசிகளை நோக்கும் பொழுது

(6ம் பக்கம் பார்க்க)

# விவசாயம் செய்த தமிழர்கள் வெளியேற்றப்படுகின்றனர்!

## இதுவா உணவுற்பத்தியின் இலட்சணம்!

—உடுவில் பா. உ.

கடந்த வாரம் தேசிய அரசுப்பேரவையில் எதிர்க் கட்சியினரால் அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பேசியதாவது:-

''உணவுப் பஞ்சம் ஏற்படும் என்பதைத் தாம் முன்னரே அறிந்திருப்பதாக வீடமைப்பு, நிர்மாணத் துறை அமைச்சர் குறிப்பிட்டார். இதற்கு சகலரினதும் உதவி தேவை எனவும் கேட்டுக் கொண்டார். ஆனால் தமிழ் மக்களின் உணவு உற்பத்திக்கு இந்த அரசு பெரும் முட்டுக்கட்டையாகவுள்ளது

''வட பகுதியிலுள்ள செட்டிகுளம் எனும் ஊரில் கடந்த 14 வருடகாலமாக நெற்செய்கையில் ஈடுபட்டிருந்த 42 தமிழ் குடும்பங்கள் கடந்த வாரம் இந்த அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்டுள்ளன. இது தான் நெல்உற்பத்தியாளர்களுக்கு இந்த அரசு செய்யும் உதவியா?

''புனேப் பகுதியிலும் இது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு செய்வதனால் ஒரு நாளும் நெல் உற்பத்தி அதிகரித்து விடாது.

''கடந்த ஏழு ஆண்டுகளாக யாழ்ப்பாண விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையில் கூடிய அக்கறை காட்டினர். அதனால் போதுமான கிழங்கு நாட்டுக்குக் கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டில் அவர்களுக்கு விதை கிழங்கு இல்லை. இதுவா உற்பத்திக்கு நீங்கள் அளிக்கும் ஊக்கம்?

''வட பகுதி மக்களுக்கு நீங்கள் அளிக்கும் தொல்லைகளுக்கு மத்தியில் நாட்டுக்குத் தம்மாலான ஒத்துழைப்பை அளித்துத்தான் வருகின்றனர். தமிழ் மக்களை இந்நாட்டின் மற்றைய பிரஜைகளைப்போல் நடாத்துவீர்களானால், நீங்கள் கட்டாயம் அவர்களின் பூரண ஒத்துழைப்பைப் பெற முடியும்.

''பிரதமரின் புதல்வரான திரு. அனுரா பண்டாரநாயக்கா அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசிய போது,



தற்போதைய அரசாங்கத்தில் பிற்போக்குவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும் இடம் பிடித்திருப்பதாகக் கூறியிருக்கிறார்; அவர் கூறும் போது அதை நாம் நம்பாமல் இருக்க முடியுமா? அப்படியான ஒரு அரசில் நாங்கள் நம்பிக்கை வைக்க வேண்டுமா? நீங்களே கூறுங்கள்.

(பலத்த சிரிப்பு)

திரு. வாசுதேவ நாணயக்கார, பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் பேசுகையில் தற்போதைய அரசில் முதலாளித்துவ வாதிகள் ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்று கூறியிருக்கிறார். அவர் கூறும் முதலாளித்துவ அரசில் நாங்கள் நம்பிக்கை வைக்கவேண்டுமா? பதில் கூறுங்கள். (பலத்த சிரிப்பு)

'கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் அண்மைக் காலம் வரை அரசாங்கக் கட்சியில் அங்கம் வகித்து வந்தவருமான டாக்டர் விக்கிரமசிங்க என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? துரோகிகள் நிறைந்த அரசாங்கம் இது என்று கூடியுள்ளார். அப்படித்துரோகிகள் நிறைந்த அரசாங்கத்தில் நாங்கள் நம்பிக்கை கொள்ளவேண்டுயா? (பலத்த சிரிப்பு)

'உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின அரசாங்க சேவையில் ஊழல் மலிந்திருப்பதாகவும், பொது நிர்வாக, உள்ளூராட்சி உள் நாட்டலுவல்கள் பதில் அமைச்சர், லஞ்சம் கொடுக்காமல் எதையும் செய்ய முடிவதில்லை எனவும் கவலை தெரிவித்திருக்கிறார்கள்.

'இப்படி நடக்கும் இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்தில் நாங்கள் நம்பிக்கை கொள்ளவேண்டுமா? நீங்களே கூறுங்கள்.'

('அடுத்து இந்த அரசாங்கத்தின் ஓர் அங்கமான சமசமாஜக் கட்சியின் எம். பி. [illegible] திரு. வி. என். நவரத்தினம் ஆற்றிய உரை அடுத்த வாரம் இடம் பெறும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்

அன்பு நண்பா,

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும்—என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும்—வாழ்வு
கெட்டு நடுத்தெருவோடு கிடந்து
கீழ் நிலையுற்றாலும்—மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்
துடைக்க மறப்பேனு?

நோயில் இருந்து மயங்கி வளைந்து
நுடங்கி விழுந்தாலும்—ஒலைப்
பாயில் நெளிந்து மரணமடைந்து
பாடையில் ஊர்ந்தாலும்—காட்டுத்
தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும்—என்றன்
தாயில் இனிய தமிழ் மொழியின் துயர்
தாங்க மறப்பேனு!

பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்
பூட்டிவைத்தாலும்—என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும்—உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும்—ஒரு
செங்களம் ஆடி வரும்புகழோடு
சிர்க்க மறப்பேனு

—இப்படித் தம் உள்ளத்து உணர்ச்சிகளையெல்லாம் கவிதையாக வடித்து—கவிதையில் சொன்னவற்றுக்கு இன்று செயல் வடிவம் கொடுத்து—சிங்களச் சிறையில் கடந்த பன்னூறு நாட்களாக இடுக்கண்களையும் இன்னல்களையும் ஏற்றுக்கொண்டு—தாம் வடித்த இலக்கியத்துக்கு இன்று தாமே இலக்கணமாக அமைந்து—தமிழர் சமுதாயத்தின் மீட்சிக்காகத் தவம் புரிந்துவரும்செந்தமிழ்க் கவிஞன் —இன்றைய தமிழர் தம் சிந்தையெலாம் நிறைந்த செம்மல்—காசி ஆனந்தனின் மேற்கண்ட பாடல்—வெடித்துக் கிளம்பும் எரிமலை போல உணர்ச்சியுடன் ஒலித்துக் கொண்டிருந்ததைக் கேட்டபோது என் உள்ளம் சிலிர்த்திட்டது; உணர்ச்சிபொங்கியது; உறுதி மேலோங்கியது!

அடடா, எங்கேயென்பதைக் கூற மறந்து விட்டேனே உனக்கு—அக்டோபர் 2ம் நாள் வரலாற்றுப் புகழ் கொண்ட மாவிட்டபுரம் கந்தனின் ஆலயத்துக்கெதிரே தான்—உண்ணுவிரதமிருந்த ஆயிரக்கணக்கான உணர்ச்சிமிகு தொண்டர்களின் மத்தியிலே தான் காசி ஆனந்தனின் எழுச்சிப்பாடல்கள், எழுந்துகொண்டிருந்ததைக் கேட்டேன்!

ஆம் நண்பா, காசி ஆனந்தனை கைது செய்து காராக்கிருகத்துள் சிங்கள ஆட்சியினர் அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்தினலும்—அவர் தூவிவிட்ட விடுதலை உணர்ச்சியை—அவரது கவிதைகள் மூலம் அவர் ஏற்படுத்தி விட்டிருக்கின்ற புரட்சிக்கனலை—இந்த ஆட்சியால் ஒரு போதுமே சிறைப்படுத்திட முடியாதென்பதற்கு அத்தாட்சியாக இன்றைக்கு கவிஞருடைய கனல்கக்கும் விடுதலைக் கவிதைகள் தமிழ் மக்களுடைய இதயங்களிலே இடம் பெற்று வருகின்றன!

மாவிட்டபுரத்தினிலே — வானளாவ உயர்ந்தோங்கி நிற்கின்ற மாவைக்கந்தனின் இராச கோபுரத்துக்கு எதிரே அக்டோபர் இரண்டில் நடைபெற்ற உண்ணுவிரதத்தில் என்றுமே காணுத அளவுக்கு தாய்க்குலத்தினர் வந்து கலந்துகொண்ட நிகழ்ச்சி, தமிழர் சமுதாயத்தின் விடுதலை உணர்ச்சி ஆழமாக வேர்விட்டு வளர்ந்து வருகின்றது என்பதற்கு தக்கதோர் எடுத்துக்காட்டாகும்!

தமிழ் இளைஞர்கள் சிலரைச் சிறைப்பிடித்து விசாரணை ஏதுமின்றி சிறைக்குள் தள்ளிவிட்டால்—தமிழர் சமுதாயம் அஞ்சிப் பதுங்கிவிடும்; உரிமைப் போரையே கைவிட்டு விடுவார்கள் தமிழர்கள்: என்று ஆட்சியினர் போட்டகணக்கைத் தப்புக் கணக்காக்கி—போராட்டத்தில் ஈடுபட்ட எம் தமிழ்ச் செல்வங்களை சிறைக்குள் தள்ளினல், இதோ நாம் வருகிறேம் களத்துக்கு — எம்மையும் கைது செய்வீர் என்று ஆட்சியாளருக்கு சவால் விடுவதுபோல உண்ணுவிரதத்திலும், தபால் சட்டமறுப்பிலும் கலந்துகொண்ட தமிழ்த் தாய்குலத்துக்கு தமிழர் சமுதாயம் இன்று தலைவணங்குகின்றது!

இந்த அளவுக்கு தமிழ்த் தாய்க்குலம் தமிழினத்தின் அரசியல் விடுதலைப்போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு துணிச்சலுடன் இன்றைக்கு முன்வருகிறதென்ருல் — அதற்கு முன்னேடியாக வழிகாட்டியாக விளங்குபவர் சகோதரி திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களேயாகும் என்பதில் துளியும் ஐயமில்லை. திருமதி அமிர்தலிங்கம் அவர்கள் —நான் முதலில் கூறியதுபோல — காசியின் உணர்ச்சிப் பாடல்களை உள்ளம் உருகும் முறையில் வேகத்துடன் பாட, அங்கு உண்ணுவிரதமிருந்த தாய்க்குலமும், இளைஞர்களும் மற்றையோரும் சேர்ந்துபாடிய போது— அதிலே புதிய எழுச்சி கரை புரண்டோடியது அங்கு!

துப்பாக்கியும் கையுமாக வேட்டை நாய்கள்போல அங்கு காத்து நின்ற பொலிசாரைப்பற்றி சிறிது கூடப்பொருட்படுத்தாது — கொளுத்திய வெயிலையும் பசித்தவயிற்றையும் கவனிக்காது—தமிழினத்தின் உரிமைக்காக கந்தனின் எதிரே தமிழ் தங்கையாகள் இருந்த தவம் நிச்சயம் அவம் போகக் கூடிய தொன்றல்ல!

உண்ணுவிரதம் நடைபெற்ற அரங்கின் முகப்பில் செந்தமிழ்க்காளை — சிறையிருக்கும் சேனுதிராஜாவின் புகைப்படம் வைக்கப்பட்டிருந்தது; அந்த இளைஞன் வெளியே இருந்திருந்தால், அவனலலவா மாவிட்டபுரத்தில் நடந்த இந்த உண்ணுவிரதத்தின்போதுமுன்னணியில் நின்றிருப்பான்? அவனில்லாவிட்டாலும், அவனைப்பெற்றெடுத்து தமிழ் சமுதாயத்துக்கு கொடுத்த அவனது அன்னையும், தம்பியும சகோதரியும் கலந்துகொண்டு உண்ணுவிரதமிருந்த காட்சி— கண்களில் நீரை வரவழைக்கக் கூடிய காட்சியாகும்!

இந்த உண்ணுவிரதத்தின்போது — வசாவிளான் வழக்கறிஞரும் இயக்கத்தின் நீண்டகால உறுப்பினருமான திருவாளர் இராசநாயகம் அவர்கள் அரங்கிலேயே வைத்து மாவைக் கந்தனை நோக்கி கேதாரகௌளி இராகத்தில் எழுதிய பின்வரும் கீர்த்தனை யொன்றை திருமதி. அமிர்தலிங்கம் அவர்கள் பாடிய போது மயிர்க்கால்கள் சில்லிட்டன!

முன்னுளில் நந்தமிழ் மொழியை நீ அகத்திய
முனிவனுக் குபதேசித் தருள விலையோ?
முனிவனவன் அம்மொழிக் கிலக்கணம்
வகுத்ததஃது
மொய்ப்புறத் தமிழ்ச்சங்கம் நிறுவ
விலையோ?
பின்னுளில் நின் தந்தை சங்கமதில்
இறையனுர்ப்
பெயருடன் அம்மொழியை வளர்க்க
விலையோ?
பெட்புற நீ நக்கீரன் அருணகிரி குமரகுரு
ஆதியோர் நினைத் தமிழிற் பாட விலையோ?
இன்னுளிற் சிங்களவர் எம்மொழியை
எம்மதத்தை
எம்மினத்தைப் புறக்கணித்தல்
அநீதியன்ருே?
இத்தவறை அன்னவர்கள் கதிர்காமம்
வரும்வேளை
இனிதுணர்த்தித் திருத்துவிக்க இயல்பை
யலையோ?
அன்னுளில் அசுரர் செய் ஆற்ருெணு
அல்லலினின்றும்
அமரரினை அறுதினத்தில் மீட்க விலையோ?
அறுமுகக் கடவுளே! அடியோங்கள்
படும் துன்பம்
அகற்றியருள் அதிவிரைவில் அகற்றியருளே!

# சிறைசெல்லக் காத்திருக்கும் நிலை குலையாத் தொண்டர்கள்

நண்பா, மாவிட்டபுரத்தில் நடைபெற்ற இந்த உண்ணுவிரத அரங்கில் வைத்துத்தான் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை முன்வைத்து—தமிழர் சமுதாயத்தின் சுதந்திர வாழ்வை அமைத்துக்கொள்ளும நோக்குடன் சாத்வீக சட்டமறுப்பு போராட்டம் தொடங்கப்பட்டதை நீ அறிவாய்!

ஏற்கெனவேகல்விச்சட்டத்தைமீறி அரசுக்குப்போட்டியாக புத்தூரில் தனித்தமிழ்ப்பாடசாலையொன்றை ஆரமபித்து தமிழர் கூட்டணி கடந்த ஏழுதிங்களாக நடத்திவருவதன் மூலம் மேற்படி பாடசாலைகளின் முகாமையாளர்களென அரசுக்கு அறிவிக்கப்பட்ட ஐந்து பேர் சட்டத்தை நிரந்தரமாக முறியடித்து வருகிறுர்கள்.

தமிழர் கூட்டணியின் இரண்டாவது சட்டமறுப்பு இயக்கம்தான் அக்டோபர் இரண்டில் நடைபெற்ற தபால்சட்டமறுப்புஇயக்கமாகும். சிங்கள ஆட்சி கொண்டுவந்த குடியரசினை தமிழர்கள் ஒருபோதுமே அங்கீகரிக்கப்போவதில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக அரசாங்கம் வெளியிட்ட குடியரசுதினமுத்திரையைவெட்டி, அதிலிருந்த தமிழர் கூட்டணி சின்னமான உதயசூரியனை மட்டுமே முத்திரையாக ஒட்டி —பிரதமருக்கு கடிதம் அனுப்பியதன் மூலம் தபால் சட்டத்தை முறித்து — அதன் காரணமாக இன்றைக்கு சிறைத்தண்டனையை ஏற்க சித்தமாக இருக்கும் சட்டமறுப்புத் தொண்டர்களின் பெயர் பட்டியலைக் கீழே தருகிறேன். [சட்டமறுப்பில் ஈடுபட்ட எவருடைய பெயராவது இதில் விடுபட்டிருந்தால்—தமிழர் கூட்டணியின் அங்கீகாரத்துடன் அவர்கள் தமது பெயரை அனுப்பி வைக்கும்படி அன்புடன் கோருகிறேன்.]

(1) சா. ஜே. வே. செல்வநாயகம், தெல்லிப்பளை (2) தா. சுங்கரப்பிள்ளை, 202 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (3) மு. சிவசிதம்பரம் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி (4) அ. அமிர்தலிங்கம் [illegible] (5) வி. தர்மலிங்கம், கந்தரோடை (6) கோணவ மகேசன், கோப்பாய்தெற்கு, கோப்பாய், (7) க. நடசின்னமணி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி (8) புதுவை ஆனந்தன், முகாமையாளர் திருமுருகன் பாடசாலை, புத்தூர். (9) மா. நடராசா, ப. ச. உறுப்பினர், சுன்னுகம் (10) சி. கதிரவேற்பிள்ளை, மகாவளவு, கோப்பாய்.

(11) வை. லோகேஸ்வரன், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (12) ச. யோகராசா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் (13) அ. குமரகுரு, 'தேவிஸ்தான்' காங்கேசன்துறை (14) சி. தம்பித்துரை முன்னுள் மாவட்ட நீதிபதி, திருநெல்வேலி (15) சி. பொன்னையா, வழக்குரைஞர், திருநெல்வேலி. (16) சி. நாகராசா யாழ்மாநகர உறுப்பினர், 101, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (17) க. சின்னத்துரை, ஆவரங்கால், புத்தூர் (18) மு. பழனியப்பன், 90 நல்லூர்ச்சந்தை, யாழ்ப்பாணம் (19) சி. விஸ்வநாதன், ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம் (20) சு. நடராசா, சத்தியஸ்தான் மல்லாகம்.

(21) சி. புஷ்பராசா, மயிலிட்டிக்கரை மயிலிட்டி, (22) ந. தர்மராசா (எம்.ஜி.ஆர்) மல்லிகை, காரைநகர் (23) ச. ஞானமூர்த்தி வல்வெட்டித்துறை (24) க. ஜெயக்கொடி மின்சார நிலைய வீதி, பருத்தித்துறை (25) வி. ஆனந்தசங்கரி, கிளிநொச்சி.

(26) ஜே. பா. குணரத்தினம், 8, இராசேந்திராவீதி, யாழ்ப்பாணம் (27) க. கதிரிப்பிள்ளை, சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி, (28) நா. இரத்தினசாமி, பத்தமேனி, அச்சுவேலி (29) க. குலசேகரன், உரும்பராய் தெற்கு, உரும்பராய் (30) மா. தெய்வேந்திரம், திடல் புலம், வசாவிளான்.

(31) பா. பொன்னம்பலம், நவக்கிரி, புத்தூர் (32) வே. கயிலாயபிள்ளை, தலைவர் கி. ச. இலுப்பைக் கடவை (33) அ. பொன்னுச்சாமி, குரு செட். ஒழுங்கை, சுண்டிக்குளி யாழ்ப்பாணம் (34) ந. கிருபானந்தன், காட்டடைப்பு வீதி காங்கேசன்துறை (35) இ. ஆனந்தசிங்கம், மயிலிட்டி.

(36) செ. சுப்பிரமணியம், புவனகிரி, கோண்டாவில். (37) பொ. கணேசமூர்த்தி. பருத்தித்துறை வீதி, பலாலி (38) வி. கதிர்காமலிங்கம், ஏழாலை வடக்கு ஏழாலை, (39) பொ. செல்வம், பிள்ளையார் கோவிலடி, மயிலிட்டி (40) ம. தில்லை நடேசன், குமரேசர் வளவு, மல்லாகம்.

(41) பூ. லோகராசன், விமன் காமம் வடக்கு, தெல்லிப்பளை (42) ந. கிருஷ்ணமூர்த்தி, ஏழாலை வடக்கு, ஏழாலை, (43) க. சண்முகநாதன், நல்லூர்ச்சந்தை, யாழ்ப்பாணம் (44) சி. ஆ. தனபாலசிங்கம், கந்தரோடை, சுன்னுகம். (45) ம. பொன்னுத்துரை, மாவிட்டபுரம் தெல்லிப்பளை (46) சு. மருதலிங்கம், கீரிமலைவீதி, மாவிட்டபுரம். (47) த. இராசலிங்கம், வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணி.

(48) சி. வன்னியசிங்கம், விமன்காமம், தெல்லிப்பளை (49) நா. செல்வராசா, ஏழாலை (50) மு. பாலகுலேந்திரன், சரசாலை சாவகச்சேரி (51) ப. சோமசுந்தரம், குப்பிழான், ஏழாலை. (52) சு. முருகானந்தம் கீரிமலைவீதி, மாவிட்டபுரம்.

(53) வித்துவான் கந்தையா, கொக்குவில் மேற்கு, கொக்குவில் (54) வி. என். நவரத்தினம், சாவகச்சேரி. (55) க. துரைரத்தினம் வல்வெட்டித்துறை (56) கா. பொ. இரத்தினம், வேலணை (57) மு. ஆலாலசுந்தரம், நல்லூர் சந்தை யாழ்ப்பாணம்.

(58) திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மூளாய், சுளிபுரம் (59) கலாநிதி தேவா, அம்பலப்பிள்ளை, குருவீதி, காங்கேசன்துறை (60) திருமதி நாகேஸ்வரி வேலுப்பிள்ளை, தங்கோடை, காரைநகர் (61) திலகமணி திருமால்' கனகசபை ஒழுங்கை, காங்கேசன்துறை (62) திருமதி எஸ். அழகரத்தினம், உரும்பராய் கிழக்கு, உரும்பராய். (63) சி. புஷ்பராணி மயிலிட்டி (64) திருமதி இராசபூபதி அருணசலம், சாவகச்சேரி.

(65) சங்கரன் தங்கராசா, எருதிடல், கைதடி வடக்கு கைதடி (66) வேலு குணரத்தினம், கச்சாய், கொடிகாமம் (67) சரவணமுத்து யோகராசா, குடமியன், வரணி (68) நாகலிங்கம் கதிர்காமத்தம்பி, தனங்கிளப்பு ரோட் சாவகச்சேரி (69) இ. சுப்பிரமணியம், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. (70) நா பாலச்சந்திரன் வேலணை-2, (71) மு சிவராசா, வேலணை-1. (72) திரு. யோ. மகேந்திரன், வேலணை (73) க. நவரத்தினம், வேலணை-2.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## பேச்சுவார்த்தை!

கடந்த இரண்டு வாரங்களாக 'பேச்சுவார்த்தை' என்ற சொல் இந்த நாட்டு நாளேடுகளில் வெகு மும்முரமாக அடிபட்டு வருகிறது. குறிப்பாக அக்டோபர் இரண்டாம் நாள் சாத்வீக சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழர் கூட்டணி இறங்கிய நாளிலிருந்து இந்தக் கூக்குரல் இந்நாட்டு பத்திரிகைகளினுல் எழுப்பப்பட்டு வருகிறது.

பேச்சு வார்த்தைகளினுல் மட்டுமே தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்; அரசுக்கும் கூட்டணிக்கும் பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும்; என்றெல்லாம் இப்போதுதான் 'திடீர் ஞானம்' பெற்று இந்தப் பத்திரிகைகள் எழுதத்தொடங்கியிருக்கின்றன.

தமிழர் கூட்டணி, 1972 ஜுன் மாதம், ஆறு அம்சக் கோரிக்கையொன்றை பிரதமருக்கு அனுப்பிவைத்து—இந்தக் கோரிக்கை பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இருப்பதாகவும் அறிவித்திருந்தது! தமிழர் கூட்டணி நீட்டிய இந்த நேசக்கரத்துக்கு பிரதமரிடமிருந்து சாதகமான பதில் ஏதும் வராதது மட்டுமல்ல—இந்தப் பிரச்சினையை முன்வைத்து தந்தை செல்வா அவர்கள் பதவி விலகியதால் ஏற்பட்ட காலி ஸ்தானத்துக்கு கடந்த ஓராண்டாக இடைத் தேர்தலை நடத்தாமலும்—42 தமிழ் இளைஞர்களை அவசரகாலச் சட்டவிதிகளின்கீழ் சிறைக்குள் தள்ளி சித்திரவதைசெய்து கொடுமைப்படுத்தியும்—தமிழ் இனத்தைப் புண்படுத்தி அவமதித்து வருகிறது!

தமிழர் கூட்டணி சமர்ப்பித்த ஆறு அம்சக்கோரிக்கை பற்றி கூட்டணியினரை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தும்படி இதுவரை அரசாங்கத்துக்கு இடித்துக் கூற முன்வராத 'தேசிய' பத்திரிகைகள்—இப்போது மட்டுத் பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை யென்று துடியாய்ம் துடிப்பதேன்?

தமிழ்ப்பேசும் மக்களிடையே, இன்று கொழுந்து விட்டெரியும் ஒரு தேசிய இனம் என்ற உணர்வையும் கட்சிபேதம் மதபேதம், பிரதேச பேதம், சாதிபேதம் கடந்த ஒற்றுமையுணர்வையும் — தமிழ் ஈழத்தின் இழந்து போன தன்னுட்சியை எப்படியும்— என்ன விலை கொடுத்தேனும் — மீண்டும் அமைத்துக்கொள்ளவேண்டும் என்கின்ற தணியாத விடுதலை வேகத்தையும் எப்படியாவது ஆறப்போட்டு சிதைத்து விடும் நோக்கம் பேச்சுவார்த்தை என்ற கூக்குரலின் பின்னணியில் உள்ளதா?

இந்தக் கேள்வி தமிழ் மக்களின் உள்ளங்களில் எழுந்து கொண்டேயிருக்கிறது.

தமிழினத்தின் கட்டுக்கோப்பான ஒற்றுமையையும், தமிழ் இனத்தின் உரிமைப் போராட்டத்துக்கு இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் இன்று கிடைத்துவருகின்ற சர்வதேச ஆதரவையும் அனுதாபத்தையும் குழப்பி பலவீனப்படுத்தி அழித்துவிடுவதுதான் பேச்சுவார்த்தையென்ற கூக்குரலின் பின்னணிச் சதி நோக்கமா?

பிரதமர் நேரடியாக அழைப்பு விடுப்பாராஞல் பேச்சுவார்த்தைக்குச் செல்ல தமிழர் கூட்டணி தயாராக இருப்பதாக கூட்டணியின் நிலையை அதன் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெளிவாக எடுத்து விளக்கியிருக்கிறார்.

தமிழினத்தின் சுயசௌரவத்துக்கு பங்கம் ஏற்படாத வகையில் தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினைகளுக்கு அந்தரங்கசுத்தியுடன் கூடிய சமாதானத்தீர்வு ஒன்று காண முடியுமாஞல்— அத்தகைய வாய்ப்பை உதறி எறிய வேண்டுமென்று நாம் ஒருபோதும் கூறமாட்டோம்!

ஆஞலும் 'பேச்சுவார்த்தை' யென்ற சொல்லைக்கேட்கும் போது தமிழ் மக்கள் மனதில்—குறிப்பாக இளைஞர்கள் உள்ளங்களில்—ஒரு திருப்தியற்ற ஏக்கம் கலந்த அங்கலாய்ப்பான மஞேநிலை தோன்றியிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டியது நம் கடமையாகும். அதை நாம் மூடிமறைக்க விரும்பவில்லை.

இதற்குக்காரணம் கடந்த காலங்களில் அரசியலில் தமிழினத்துக்கு ஏற்பட்ட சூடுகள்தாம். இதற்கு முன் தமிழ் மக்களுடன் செய்யப்பட்ட எந்த ஒப்பந்தமும், உடன்படிக்கையும் சிங்களத் தலைவர்களால் அந்தரங்க சுத்தியுடன் நடைமுறைப்படுத்தப்படவில்லையென்பது வரலாறு கூறுகின்ற உண்மை.

இந்தக் கசப்பான உண்மைகள்தாம் தமிழ் இளைஞர் சமுதாயத்தினரிடம், பேச்சுவார்த்தை என்னும்போது பீதியையும்ஏக்கத்தையும்விரக்தியையும்ஏற்படுத்துகின்றன பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்று, உடன்பாடு ஏற்படுமாஞல் கூட—அதஞல் இனத்துக்கு நன்மை ஏற்படுமா? அல்லது தமிழ் ஈழ சுதந்திரப் போராட்டத்தை மேலும் பத்தாண்டுகள் அது பின்தள்ளி விடுமா? கண்ணைத் திறந்து கொண்டே மீண்டும் கிணற்றுள் வீழ்வதா என்பன போன்ற கேள்விகள் தமிழ் மக்களின் நெஞ்சங்களை இன்று அரிக்கின்ற கேள்விகளாகும்.

தமிழினம் ஆளப்படும் இனம்; சிங்கள இனம் ஆளுகின்ற இனம் எனும் இன்றைய நிலை மாறி, தமிழினம் தன்னைத்தானே தனது பிரதேசத்தில் தனது மொழியிஞல் ஆளுகின்ற இனம் என்ற உரிமையை நிலைநாட்ட முடியாவிடின், எந்தப் பேச்சுவார்த்தையும் எந்த உடன்படிக்கையும் பயன்தராது என்பதே எமது தீர்க்கமான கருத்தாகும்!

தமிழர் கூட்டணித் தலைவர்கள், அரசியல் விவேகமும் முதிர்ச்சியும் உள்ள சிறந்த ராஜதந்திரிகள்; விடுதலைப் படையை நடத்திச் செல்கின்ற தளபதிகள்; எனவே அரசு பேச்சுவார்த்தைக்கு அழைக்குமாஞல் தமிழ் மக்களின் உணர்ச்சியை புரிந்துகொண்டு ஒவ்வொரு அடியையும் நிதானமாக அவர்கள் எடுத்துவைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்!

# விசர்பிடித்த நாயின் நிலையில் பிதற்றுகிறது 'டெயிலிமிறர்'

## தமிழினத்தின் தலைவர்களை அவமதிக்கும் தரம் கெட்ட ஏடுகளுக்கு எச்சரிக்கை!

இந்த நாட்டு நாளேடுகள்—இரண்டொரு தமிழ் நாளேடுகள் தவிர — ஏனைய அனைத்தும் தமிழினத்தின் அபிலாஷைகளுக்கும் உரிமைக் கோரிக்கைகளுக்கும் முழுக்க முழுக்க எதிரிகள் என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

தமிழரசுக்கட்சியோ, தமிழர் கூட்டணியோ, தமிழினத்தின் உரிமைக் கோரிக்கையை முன்வைத்து எதைச் செய்தாலும், எத்தகைய போராட்டத்தை நடத்திஞலும், அதைக் கண்டிப்பதும், கிண்டலும் கேலியும் செய்வதுமே தங்கள் பத்திரிகா தர்மம் என்று இந்த நாட்டுப் பத்திரிகைகள் கருதிக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களின் இயக்கங்களைத் தாக்கி — எழுதி தமிழ் மக்கள் மத்தியிலேயே தங்கள் பத்திரிகைகளையும் விற்பனை செய்துவருகின்றனர் —இந்த ஏடுகளை நடத்துவோர்!

—இத்தகைய ஏடுகளில் ஒன்றுதான் 'சிலோன் டெய்லி மிரர்' எனும் ஆங்கில நாளேடு. இந்தப் பத்திரிகை-அண்மையில் சிங்கள நிர்வாகத்தின்கைக்குமாறிய பின்னர் தமிழர் கூட்டணிக்கும், தமிழரசுக்கட்சிக்கும் எதிராக விசர்நாய் போல நாள்தோறும் குரைத்துவருவதை தமிழ் மக்கள் கவனித்துக்கொண்டுவருகிறுர்கள்.

தாக்குவதும், கண்டிப்பதும், திட்டுவதும்தான் இந்தப் பத்திரிகை கண்டுபிடித்துள்ள பத்திரிகாதர்மம்? லேக் ஹவுஸ் ஸ்தாபனம் அரசால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர்—இந்தப் பத்திரிகை அஞ்சி நடுங்கி, வாலைக் குழைத்துக்கொண்டு அரசுக்கு துதிபாடி வருகிறது!

இந்தப் பத்திரிகை, டைத்தியத்தின் உச்சக்கட்டத்தையடைந்துவிட்டதை அதன் 6.10.73 ஆசிரியத் தலையங்கம் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது, ஒரு காலத்தில், 'பத்திரிகா தர்மம்-கண்ணியம்' என்பனவற்றுக்கு பெயர்பெற்று விளங்கிய இந்தப் பத்திரிகை - கண்ணியம் இழந்து, அநாகரீகமான வார்த்தைகளால் தமிழர் கூட்டணித் தலைவர்களை திட்டித் தீர்த்திருக்கிறது.

35 இலட்சம் தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவரான தந்தை செல்வாவை A Gandhi out of nothing more than an ascertie exterior and a hypocritic interior என்று குறிப்பிட்டும், தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகத்தை, 'A Garibaldi of a pot bellied Lingam who has never known any blood, sweat or tears except the crocadile tears he regularly sheds on the explanades and maidans of the north and east" என்றும் குறிப்பிட்டு கேவலமாக நையாண்டி செய்திருக்கிறது இந்த ஏடு.

உள்ளே கபடத்தனமும் வெளியே தபசித்தோலமும் உள்ள காந்தி யென்றும், இரத்தம், வியர்வை கண்ணீர் அறியாத 'கரிபோல்டி' என்றும் முறையே தந்தை செல்வாவையும், நாவலர் அமிர்தலிங்கத்தையும் மறைமுகமாக கிண்டல் செய்திருக்கிறது இந்த ஏடு.

இதுபோன்றே — ... ஆண்டுகளாக சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து இவர் தங்கள் வயிற்றுப் பிழைப்பைப் பார்த்து — சொகுசான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் என்றும் இன்னும் என்னவெல்லாமோ உளறியிருக்கிறது இந்த ஏடு.

தமிழரசுக் கட்சியின் தலைவர்கள்—கடந்தகாலங்களில் எப்படியெல்லாம் தியாகம் செய்து — எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு — தங்கள் சொத்து சுகங்களை இழந்து சிறைகளுக்கு பல தடவை சென்று, கண்ணீரும் இரத்தமும் வியர்வையும் சிந்தி, தமிழர்விடுதலை இயக்கத்தை நடத்தி வருகிறுர்கள் என்பது ஒவ்வொரு தமிழனுக்கும் தெரிந்த உண்மை.

இத்தகைய, தமிழ் மக்களின் அபிமானத்துக்குரிய தலைவர்களை—தமிழ் சமுதாயத்தை வழி நடத்தும் தமிழர் கூட்டணித் தலைவர்களை இவ்வளவு கேவலமாக வாய்க்கு வந்தபடி 'டெயிலிமிரரும்' மற்றும் ஏடுகளும் திட்டுவதை தமிழ் மக்கள் எப்போதும் பார்த்துக் கொண்டுஇருக்கப்போகிறுர்களா? எப்படி இவற்றுக்குப் பாடம் புகட்டப் போகிறுர்கள்?

அநாகரிகமான முறையில் தமிழர் கூட்டணித் தலைவர்களை திட்டியதற்காக டெயிலிமிரர் கூட்டணித் தலைவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்—இன்றேல், அந்தப் பத்திரிகையை பகிஷ்கரிக்கும்படி மக்களிடம் பிரசாரம் நடத்துவதுடன், அதற்குத் தீமூட்டியும் எரிப்போம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு.

'டெயிலிமிரருக்கு' விடுக்கப்பட்டுள்ள இந்த எச்சரிக்கை—டெயிலிமிரருக்குமட்டுமல்ல — தமிழர் கூட்டணியின் இயக்கங்கள் பற்றி நாளாந்தம் பொய்ச்செய்தி வெளியிட்டுவரும் 'தினகரன்' போன்றபத்திரிகைகளுக்கும் ஓர் எச்சரிக்கையாக அமையும் என்று, நாம் கருதுகிறோம்.

இந்நாட்டில் வாழும் தமிழ் இனத்தவர்கள் வெறும் கிள்ளுக்கீரைகள் அல்ல சிங்கள முதலாளிகளாலும் அரசாங்கத்திஞலும் ஆட்டுவிக்கப்படும் பத்திரிகைகள் நினைத்தபடி தமிழ் மக்கள் ஒருபோதுமே ஆட மாட்டார்கள்; தமிழ் மக்களுக்கு எதுவேண்டும், அல்லது எதுவேண்டாம் தமிழினம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் கட்டளையிட இந்தப் பத்திரிகைகளுக்கு அதிகாரம் கிடையாது. தமிழ் மக்களின்மீதும் அவர்களது அபிமானத் தலைவர்கள் மீதும், இந்தப் பத்திரிகைகள் குதிரைவிட நினைத்தால், அவற்றின் கொட்டம் அடக்கப்படுவதுடன், தமிழர்கள் அவற்றைப் பகிஷ்கரித்து கொளுத்தி எரிப்பார்கள் என்று எச்சரிக்கிறோம்.

## கொழும்பு வடக்கு இடைத்தேர்தலில் ஆளுங்கட்சிக்கு பலத்த அடி

அரிசி வெட்டு, மாவு பாண் சீனி விலை உயர்வு, ஏனைய பொருள் தட்டுப்பாடு ஆகியவற்றிஞல் இந்தநாட்டு மக்கள் அடைந்துள்ள கொதிப்பை அரசுக்கு சரியான முறையில் எடுத்துக் காட்டியிருக்கிறுர்கள் கொழும்பு வடக்குத் தொகுதி மக்கள்.

கொழும்புவடக்கு இடைத் தேர்தலில் அரசாங்கக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட சமசமாஜ வேட்பாளர் ஆனந்த பிரேம சிங்காவுக்கு ஆக 9,818 வாக்குகளே கிடைத்துள்ள அதே வேளையில் எதிர்க்கட்சியான யூ. என். பி. வேட்பாளர் திரு. வின்சன்ட் பெரேரா 26,956 வாக்குகள் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

---

## புதிய வாசிகசாலை திறப்பு விழா

பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூக நிலையத்தின் புதிய வாசிகசாலை திறப்புவிழா கடந்த 3-10-73 திகதி புதன்கிழமை மாலை விமரிசையாக நடைபெற்றது மேற்படி சனசமூக நிலையத் தலைவர் திரு. எஸ். மாணிக்கம் புதிய வாசிகசாலைக் கட்டடத்தை சம்பிரதாய முறைப்படி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

திரு. வ. விசுவலிங்கம் திரு. செ. செல்லத்துரை ஆகியோரும் சொற்பொழிவாற்றினுர்கள். ஈற்றில் மேற்படி சனசமூக நிலையச்செயலாளர் திரு. என். எம். கந்தசாமி நன்றி கூறினுர்.

## இளைஞர் பேரவை உண்ணுவிரதம் இன்று 34வது நாள்

தமிழ் இளைஞர் பேரவையின் உண்ணுவிரதம் இன்று 34வது நாளாக கிழக்கிலங்கையிலுள்ள கல்குடா தொகுதியில் நடைபெறுகிறது.

சென்ற 5-10-73ல் மட்டக்களப்புத் தொகுதியில் உள்ள ஆரையம்பதியில் 25வது நாளாக தொடரப்பட்ட உண்ணுவிரதம், 26வது நாள் மட்டக்களப்பிலுள்ள விபுலானந்தர் சிலைமுன்பும், 27ம், 28ம் நாளாக கல்முனைத்தொகுதியிலும், 30ம், 31ம் நாட்களாக நிந்தவூர்த்தொகுதியிலுல், 32, 33ம் நாட்களாக பொத்துவில் தொகுதியிலும், 33ம் நாளில் கல்குடாத்தொகுதியில் ஆரம்பித்து இன்று 34வது நாளாக அங்கு நடைபெறுகிறது. 35வது நாள் (15-10-73) உண்ணுவிதரமும் கல்குடாத்தொகுதியிலேயே நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதைத்தொடர்ந்து 15-10-73வரை மலையகத்திலும், 17-10-73 முதல் 19-10-73 வரை மூதூர் தொகுதியிலும், 19-10-73 முதல் 21-10-73 வரை திருக்கோணமலைத் தொகுதியிலும், 21-10-73 முதல் 23-10-73 வரை வவுனியாத் தொகுதியிலும் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது கட்சியாலும் தமிழ்மக்களாலும் ஒதுக்கப்பட்டுள்ளவர் அருளம்பலம்!

## இவரது தலைமையின் கீழ்தான் அபிவிருத்தியென்றால் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு அரசுக்குக் கிடையாது!

—பண்டிதர்.

சரவணையில் ஒரு வீட்டில் இரகசியமாக குசு குசு கூட்டம் நடத்திச் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளை நிறுவப்பட்டதாகச் செய்தி ஈழநாட்டில் வெளிவந்தவுடன் சரவணையிலுள்ள தன்மானம் மிக்க இளைஞர் சிலர் இச் சூழ்ச்சியைப் பொறுக்காமல் பொங்கி எழுந்தனர். தமிழர் கூட்டணியின் சார்பில் ஒரு கருத்தரங்கை நடத்தி உண்மை நிலையை ஊரறியச் செய்ய வேண்டுமென்று முயன்றனர். இதனாலேயே இக் கருத்தரங்கு இங்கு நடைபெறுகின்றது:

அரசாங்கத்தை அண்டி வயிறுவளர்ப்பவர்கள்—அமைச்சர்களின் அடிவருடிகள் அரசாங்கம் தமிழருக்கு அள்ளிக் கொடுத்துவிட்டதென்று பொய்ப்பிரசாரம் செய்யாமல் இருக்கலாமே! இதனை விடுத்து; அமைச்சர்களை அழைத்து, கொடி குடை ஆலவட்டம் பிடித்து, மாலை சூட்டி நூற்றுக்கணக்கான பொலிசுக்காரர் சூழ நின்று காவல் புரிய அமைச்சருக்கு வரவேற்புக் கொடுக்கும் மேடையில் அவரை மகிழ்விக்கப் பொய்யையும் புரட்டையும் பேசுவதை இனித் தன்மானம் மிக்க தமிழ் இளைஞர்கள் பொறுக்க மாட்டார்கள்.

134 பிரிவுகள் கொண்ட இலங்கை அரசியலமைப்பை இங்கு கூடியிருக்கும் உங்களில் எத்தனைபேர் படித்திருக்கிறீர்கள்! இதனை நீங்கள் படித்து விளங்கினால் இந்தப் புதிய அரசியலமைப்பு பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டும் அரசியல் அமைப்பு என்பதையும் தமிழினத்தை நிரந்தர அடிமைகளாக்கும் அடிமைச்சாசனம் என்பதையும் நன்கு அறிவீர்கள்.

அமைச்சர் குமாரசூரியருக்கு வரவேற்பு வைப்பதற்குத் தானே இங்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளை தொடக்கப்பட்டுள்ளது. யார் இதைத் தொடக்கினார்கள்? அவரின் தரகர்கள் தானே! யார் இந்தக் குமாரசூரியர். அடுத்த தேர்தலுக்குப் பின் இவரைத் தேசிய அரசுப் பேரவையில் காணமுடியுமா? இவர் தமது வாழ்நாளில் இனி பா. உ. வாகவோ அமைச்சராகவோ வரமுடியுமா?

கற்குடா பா. உ. கல்வி அமைச்சருக்கு விடுத்த பகிரங்கக் கடிதத்தில் கூறியது போலப் பாராளுமன்றத்துக்கு பின் கதவால் வந்த இவர் முன் கதவால் வரத் தக்கவரா? வரமுடியுமென்று இவருடைய தரகர் யாரேனும் கூறமுடியுமா? துணிவிருந்தால் — தன்மானம் இருந்தால் 'சூடு சொறணை' இருந்தால் இந்தக் குமாரசூரியர் தாம் அமைச்சராக அதிகாரத்திலிருக்கும் போது —அவருக்கு அமைச்சர் பதவி எனும் எலும்புத்துண்டைப் போட்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முதல் அமைச்சராக இருக்கும் பொழுது காங்கேசன்துறையில் போட்டியிட்டு வென்று முன் கதவால் தேசிய அரசுப் பேரவைக்குச் செல்லுமாறு நாங்கள் விடும் சவாலை ஏற்பாரா? தலைமைத் தரகர் குமாரசூரியருடைய ஆட்டமும், அவருடைய குட்டித் தரகர்களின் நடப்பும் அடுத்த தேர்தல்வரையுந் தானே! இதை எவரும் மறுப்பார்களா?

இன்றைய ஆட்சியில் தமிழருக்குப் பங்கு உண்டா? இன்று அமைச்சரவையில் ஒரு தமிழராகுதல் இருக்கிறார்களா? ஏன் குமாரசூரியர் இல்லையா? என்று நீங்கள் கேட்கலாம். அவர் தமிழரின் பிரதிநிதியா? எந்தத் தொகுதியிலிருந்து எத்தனை வாக்குக்கள் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டவர்? அவர் யாருடைய பிரதிநிதி? ஒரு சிங்கள அம்மையாரின் ஏகப் பிரதிநிதியேயன்றித் தமிழ் மக்களின் பிரதிநிதியன்று.

இந்த அரசாங்கம் [illegible] லைந்து லட்சம் [illegible] பேசும் மக்களின் வாக்குரிமையைச் சிறிதும் மதிக்கவில்லை. தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதியாகப், பிரதமர் தாம் விரும்பிய ஒருவரை அமைச்சராக நியமித்துத் தமிழ் பகுதியை ஆட்சி செய்கின்றார். இதனாலேயே அமைச்சர் திரு. குமாரசூரியரைச் சிங்கள ஏகாதிபத்தியத்தின் தலைமைத்தரகர் என்று கூறுகிறோம். இவருடைய 'தர்பார்' அடுத்த தேர்தலுடன் முடிந்துவிடும்.



ஜே. பி: பதவிகள், ப: நோ. கூ. சங்க இயக்குனர் பதவிகள் போன்ற பதவிகளைப் பெற மூலைமுடுக்குகளில் தோன்றிய சுதந்திரக் கட்சிக் கிளைகள் எல்லாம் இருந்த இடமும் தெரியாமல் மறைந்துவிடும். ஆனால் எட்டப்பர்களாகினவர்களின் வரலாறு நிலைக்கும். அடுத்த தேர்தலின்பின் வேறு கட்சி ஆட்சிக்கு வந்தால் குறுக்கு வழியில் பதவிபெற்ற இவர்கள் எல்லோருடைய பதவியும் பறிபோய்விடும்.

சரவணை உபதபால் நிலையத்துக்குத் தொலைபேசி கொடுக்கச் செய்வதற்கு நான் மூன்றுண்டுகள் போராடினேன். சென்ற மூன்றுண்டுகளில் எனது தொகுதிக்குக் கொடுக்கப்பட்ட தொலைபேசி சரவணைக்குத்தான் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இதற்காக யாரைப் பாராட்ட வேண்டும்?

இப்பொழுது தமிழ்ப்பகுதிகளில் சிங்கள ஆட்சியும் சிங்கள ஆட்சியினரை அண்டிப் பிழைக்கும் தமிழ்த் தரகர்களின் அதிகாரமும்தான் தாண்டவமாடுகின்றன. விரல்விட்டு எண்ணத்தக்க எட்டப்பர்கள் பெரும்பான்மையினரான தமிழரை ஆழ்கின்றார்கள்! யாழ் மாவட்டத்துக்கு சிங்கள இனவெறி ஆட்சியின் அரசியல் அதிகாரியாக நல்லூர் பா. உ. நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்திலேயுள்ள பதினெரு தொகுதிகளில் பெரும்பான்மையான தொகுதிகளில தமிழர் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களே பிரதிநிதிகளாயுளர். இவர்களைப் புறக்கணித்துவிட்டு தமது கட்சியாலே தூக்கி வீசப்பட்ட திரு. அருளம்பலத்தை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அரசியல் அதிகாரியாக நியமித்தால் அவருக்கு மக்கள் ஆதரவு கிடைக்குமா? விவசாய விருத்திமுறையாக நடக்குமா? ருடேசியாவில் நடக்கும் சிமிதின் ஆட்சிதான் இன்று தமிழ்ப்பகுதிகளில் நடக்கின்றது.

இந்த நாட்டிலே தமிழரின் பிறப்புரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. அவர்கள் அடிமைகளாக ஆக்கப்பட்டு அவதிப்படுகின்றனர். இந்த அடிமை விலங்கை அறுத்தெறிந்து உரிமை பெற்று வாழத் துடிக்கும் இளந்தமிழ்ச் சிங்கங்களுடன் எல்லாத் தமிழ் மக்களும் ஒன்றுபட்டுப் போராடவேண்டும்.

---

### மன்னாரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பிடுவதற்குக் கோவில் ... இவைகளெல்லாம் படிப்படியாக உருவாகுமென்பதில் ஐயமில்லை.

இது இவ்வாறிருக்க மன்னார்ப் பட்டினத்திலுள்ள ஒரு பௌத்த விகாரையை விரிவாக்க பண வசூல் செய்யப்படுகிறதாம். அந்த விகாரையைச் சுற்றியும் சிங்கள மக்கள் குடியமர்த்தப்படப் போவதாகவும் பேசப்படுகிறது. இத்தனைக்கும் மன்னார் மக்களை வெறும் கோமாளிகளாகவும் ஏமாளிகளாகவும் அரசாங்கம், நினைத்துக் கொண்டிருக்கிறதா என்று இங்குள்ள பொதுமக்கள் பொருமுகிறார்கள்.

"பட்டிப்பளையையும் அல்லையையும் பறிகொடுத்துவிட்டோம். திருகோணமலை பறிபோய்க்கொண்டிருக்கிறது. வவுனியாவும் அப்படியே. மன்னார்ப்பகுதியில் மடு வீதி, பரப்புக்கடந்தான் பகுதிகளிலும் குடியேற்றம் நடந்து கொண்டிருக்கிறது. இப்படியே ஈழத்தமிழ்ப் பகுதிகள் ஒவ்வொன்ருகத் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றத்தால் அழிக்கப்பட்டால் நமது உரிமைப் போராட்டத்தில் அர்த்தமென்ன?" என்று இங்குள்ள தன்மானத் தமிழ் இளைஞர்கள் உள்ளம் கொதிக்கிறார்கள்.

இந்த விடயமாக மன்னார் தே. பே. உறுப்பினர் திரு. அழகக்கோனுக்கும் முறையீடு செய்யப்பட்டது. திரு. அழகக்கோன் பிரதமருக்கு இதுபற்றித் தந்தியும் கடிதமும் அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது. தேசியப் பேரவையிலும் தாம் இதுபற்றிப் பேசவிருப்பதாக திரு. அழகக்கோன் தெரிவித்துள்ளார்.

---

### பிரதமர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேசன்துறை இடைத் தேர்தல் ஒன்றை நடத்தவாய்ப்பு அளித்ததும் — தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கையை வென்றெடுக்கும் நோக்குடன் தான் என்றும் தமிழினத்தின் அடிப்படைப் பிரச்சினையான உரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால், ஏனைய பிரச்சினைகளுக்கு தானுகவே தீர்வு ஏற்படுமென்றும் தெரிவித்தார்.

---

### இப்படியும் சொன்னார்கள்

"காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா ஆட்சிக்கு வந்ததும் அந்நியமொழியான ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, தமிழுக்கும் சிங்களத்திற்கும் சரியாசனம் கொடுத்தார்.

— தபாலமைச்சர் குமாரசூரியர்

(ஆதாரம்வீரகேசரி6-10-73)

ஃ

தத்தமது மொழி, கலாசாரத்தைப் பேணுவதற்கான வகுப்புவாதம் வரவேற்கத்தக்கதுஎன்றுஅமரர் பண்டாரநாயகா 1939-ம் ஆண்டே கூறியுள்ளார்.

— தபாலமைச்சர் குமாரசூரியர்

(வீரகேசரி 6-10-73)

ஃ

"சாத்வீக ஆயுதத்தைத் தோற்கடிக்க முடியாது"

— அமைச்சர் மைத்திரிபால காந்தி ஜெயந்திக்கூட்டத்தில் பேசியது.

(வீரகேசரி 4-10-73)

---

### பேராசிரியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலதுறைக் கலாநிதிகளினதும் சதி கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்சிச் சார்போ, அரசியல் இலாபமோ இன்றி ஈழத் தமிழ் மக்கள் அனைவரினதும் ஆதரவோடும், திட்டமிட்டபடி மாநாட்டை நடாத்துவதற்கு இலங்கைக் கிளையினர் ஏகோபித்த முடிவை மேற்கொண்டுள்ளனர்.

மாநாட்டு ஒழுங்கிற்கென அமைப்புக் குழுவும், நிதிக் குழுவும் தனியாக நியமிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையைச் சேர்ந்த, கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜா, கலாநிதி கோபாலபிள்ளைமகாதேவா, திருமதி பு. திருச்செல்வம், கலாநிதி எஸ். பத்மநாதன், திருவாளர்கள் சச்சிதானந்தன், பேரின்பநாயகம் ஆகியோர் தலைமையில், முறையே கலைநிகழ்ச்சி, பிரசாரத் தகவல், வரவேற்பு, கண்காட்சி, மண்டப வசதி ஏற்பாடு, சுற்றுலா, போன்ற விடயங்களுக்கான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக் கிளையின் பொதுச்செயலாளராகிய வண. தனிநாயக அடிகளார் அவர்களும் தனது உலகச்சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு கடந்த வாரம் இலங்கை திரும்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் இயங்கும் தமிழ்ப் பண்பாட்டு இலக்கிய மன்றங்களினதும், பொது நிறுவனங்களினதும் ஆதரவோடு நிதி சேகரிப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசாங்கத் தமிழ்த் தட்டெழுத்தாளர் சங்கம் ஏற்கனவே அதன் அங்கத்தவர்களுக்கு நிதி அங்கத்தவர்களுக்கு நிதி அன்பளிப்புக் கோரிக்கையை சஞ்சிகை வாயிலாக வெளியிட்டுள்ளது.

---

### 'டெயிலி மிரர்' தீயிடப்படும்

"சிலோன் டெயிலிமிரர்" பத்திரிகை அதன் 6.10.73 ஆசிரியத்தலையங்கத்தில் தமிழர் கூட்டணித்தலைவர்களை அநாகரீகமான முறையிலும் தரக்குறைவாகவும் தாக்கியுள்ளதை தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு கடுமையாக கண்டித்துள்ளது.

இவ்வாறு பண்பாடற்ற தகாத முறையில் கண்ணியக் குறைவாக எழுதியதற்காக அப்பத்திரிகை தமிழர் கூட்டணித்தலைவரிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்றும், அப்படிச்செய்ய அது தவறினால், அப்பத்திரிகையைப்பகிஷ்கரிக்கும்படி தமிழ் மக்களையும் பத்திரிகைப்பண்பாடு பாதுகாக்கப் பட வேண்டுமென விரும்பும் ஏனையோரையும் கோருவதுடன் அப்பத்திரிகையைப் பகிஷ்கரிக்கும் ஓர் அடையாளமாக அப்பத்திரிகையை தீயிட வேண்டிவருமெனவும் - தமிழர் கூட்டணி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

---

### உணவுற்பத்திக் கருத்தரங்கு

நாட்டை எதிர்நோக்கியுள்ள உணவு நெருக்கடி பற்றியும் உணவுற்பத்தி பற்றியும் பதினெரு தமிழ்பேசும் மொழி வழித்தொழிற் சங்கங்கள் ஒன்றுகூடி 15-10-73 மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்றை நடத்துகின்றன.

இக்கருத்தரங்கில் உடுப்பிட்டி முன்னாள் பா. உ. மு. சிவசிதம்பரம், வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு ஆகியோர் உரையாற்றுவர்,

---

இதோ மற்றுமோர் சீர்திருத்தப்பெற்ற உன்னத தயாரிப்பு!

நியூ மில்க் வைற் சோப்

எங்கும் விற்பனையாகிறது.
விலை சதம் 45 மட்டும்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைந்தமிழ் இனத்தின் உரிமைக்காக பட்டினிகிடந்து பசியால் மெலிந்து தமிழ் இளைஞர் நடத்திவரும் அறப்போர்!

தமிழ் இளைஞர் பேரவையின் 50நாள் உண்ணாவிரதப் போராட்டம் நாள் தோறும் கருத்தரங்குகளுடன் விறுவிறுப்புடன் நடைபெற்றுவருகிறது. இளைஞர்களின் பேராதரவையும் அது பெற்று வருகிறது.

இதுவரை நடைபெற்ற உண்ணாவிரதங்களில், திரு. அமிர்தலிங்கத்தின் சொந்த ஊரான வழக்கம்பரை அம்மன் கோவில் முன்றலில் நடைபெற்ற உண்ணாவிரதத்திலேயே ஆகக் கூடுதலான இளைஞர்கள் (85 பேர்) கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அராலியில் 48 இளைஞர்களும், காரை நகரில் 39 இளைஞர்களும் கலந்துகொண்டனர். வட்டுக் கோட்டைத் தொகுதியில் நடைபெற்ற 3 நாள் உண்ணாவிரதத்தில் மூன்றுநாட்களும் தொடர்ச்சியாக 'எம். ஜி. ஆர்' என்று செல்லமாக அழைக்கப்படும் தர்மராசா என்ற வாலிபர் உண்ணாவிரதம் இருந்தது குறிப்பிடத் தக்கதாகும். இந்த வாலிபர் கடந்த தேர்தலில் திரு: தியாகராசாவுக்காக உழைத்தவர்—

## 14வது நாள் உண்ணாவிரதம்

தமிழ் இளைஞர் பேரவையின் 14வது நாள் உண்ணாவிரதம் பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள வல்வெட்டித்துறை நெடிய காட்டுப்பிள்ளையார்கோவிலடியில் 24. 9. 73 மாலை 6 மணிக்கு தேசிய கீதம் கருத்தரங்குடன் ஆரம்பமாகி 25. 9. 73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. 40 இளைஞர்களுடன் கூட்டணி இணைச் செயலாளர்களில் ஒருவரான திரு. ச. ஞானமூர்த்தியும் இங்கு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தார். சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினத்தின் மகன் சண்முகானந்தன் தேசிய கீதப் [illegible]ஞர். நடைபெற்ற கருத்தரங்கில், க. துரைரத்தினம் பா. உ, வி. என். நவரத்தினம் பா. உ, கொள்கை தங்கம் குமரகுரு, புஷ்பராசா திரு. க. ஜெயக்கொடி ஆகியோர் உரையாற்றினர்.

## 15வது நாள் போராட்டம்

15வது நாள் உண்ணாவிரதப் போராட்டம் பருத்தித்துறை பிள்ளையார் கோவிலடியில் 25—9—73 மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி, 26—9—73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. சுமார் 30 இளைஞர்கள் கலந்துகொண்ட இந்த உண்ணாவிரதத்தின் துவக்கத்திலும் முடிவிலும் கருத்தரங்குகள் நடைபெற்றன. பருத்தித்துறை, உடுப்பிட்டி பா. உ. க்களுடன் கூட்டணித் தலைவர்களும் இதில் பங்கேற்றனர்.

## 16வது நாள் போராட்டம்

16வது நாள் உண்ணாவிரதப் போராட்டம் நாகர் கோவில் நாகதம்பிரான் கோவிலடியில் 26. 9. 73 மாலை 6. மணிக்கு ஆரம்பமாகி 27. 9. 73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. 20 இளைஞர்கள் இதில் பங்கேற்றனர்.

## 17வது நாள் போராட்டம்

17வது நாள் உண்ணாவிரதப் போராட்டம், உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள மந்திகைச்சந்தியில் கண்ணகை அம்மன் கோவில் வீதியில் 27. 9. 73 மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி 28. 9. 73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. இந்த உண்ணாவிரதத்தில் ஏழு வயதுச்சிறுவன் ஒருவனும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. உடுப்பிட்டி பா. உ. ஜெயக்கொடியின் மகனும் ஏனைய இளைஞர்களுடன் சேர்ந்து உண்ணாவிரதம் இருந்தார்.

## 18வது நாள் போராட்டம்

இளைஞர் பேரவையின் 18 வது நாள் உண்ணாவிரதம் கரவெட்டி மூத்தவிநாயகர் கோவிலடியில் 28. 9. 73 மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி 29. 9. 73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. எட்டுச்சிறுவர்கள் உட்பட 49 இளைஞர்கள் இதில் பங்கு கொண்டனர்.

## 19வது நாள் போராட்டம்

19வது நாள் உண்ணாவிரத போராட்டம் உடுப்பிட்டிச் சந்திப்பிள்ளையார் கோவிலடியில் 29. 9. 73 மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி 30. 9. 73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது.

## 20வது நாள் போராட்டம்

20வது நாள் உண்ணாவிரதம், அளவெட்டி கேணிக்கரை வைரவ ஆலய முன்றலில் 30. 9. 73 மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி 1—10—73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. திரு தா. திருநாவுக்கரசு உண்ணாவிரதத்தை தொடக்கிவைத்தார் தந்தை செல்வா, உடுவில் பா. உ. புலவர் திருநாவுக்கரசு ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றினர். பெருந்தொகையான மக்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். சுமார் 60 இளைஞர்கள் இதில் பங்கேற்றனர்.

## 21வது நாள் உண்ணாவிரதம்

இளைஞர் பேரவையின் 21வது நாள் உண்ணாவிரதம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் 1-10-73 மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி 2-10-73 மாலை 6 மணி வரை நடைபெற்றது. உண்ணாவிரதத்துக்கு சிறையிலிருக்கும் சேனாதிராசாவின் சகோதரர் தங்கராசா தலைமை தாங்கினார் மாலை 6 மணிவரை நடைபெற்றது. 2-10-73 காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை இளைஞர் பேரவையின் உண்ணாவிரதமும், தமிழர் கூட்டணியின் உண்ணாவிரதமும் இணைந்து நடைபெற்றது. உண்ணாவிரதத்தின் முகப்பில் சேனாதிராசா காசி ஆனந்தன் ஆகியோரின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

## 22வது நாள் உண்ணாவிரதம்

22வது நாள் உண்ணாவிரதப்போராட்டம் இளவாலை கென்றி அரசினர் பாடசாலைக் கருகில் 2-10-72 6மணிக்கு ஆரம்பமாகி 3-10-73 மாலை 6 மணிக்கு கருத்தரங்குடன் நிறைவேறியது. ஏராளமான மக்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

## 23வது நாள் உண்ணாவிரதம்

23வது நாள் உண்ணாவிரதப்போராட்டம் நல்லூர்த் தொகுதியில் உள்ள இரு இடங்களில் ஒரே காலத்தில் நடைபெற்றது. தாவடி முனிஸ்வரன் கோவில் வாசலிலும் அரியாலைச் சந்தியிலும் 3-10-73 மாலை 6 மணிக்கு கருத்தரங்கு, தேசிய கீதத்துடன் ஆரம்பமாகி, 4-10-73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. ஏராளமான இளைஞர்கள் இதில் பங்கு கொண்டனர்.

## 24வது நாள் உண்ணாவிரதம்

24வது நாள் உண்ணாவிரதப்போராட்டமும் நல்லூர்த் தொகுதியில் இரு இடங்களில் நடைபெற்றது. திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிக்கு அருகாமையிலும், கொக்குவிலிலும் சமகாலத்தில் இந்த உண்ணாவிரதங்கள் நடைபெற்றன. 4-10-73 மாலை ஆரம்பமாகி 5-10-73 மாலை முடிவடைந்தது.

## 25வது நாள் உண்ணாவிரதம்

25வது நாள் உண்ணாவிரதம் நல்லூர் தொகுதியிலுள்ள நாச்சிமார் கோவிலடியில் 5-10-73 மாலை 6மணிக்கு ஆரம்பமான அதே வேளையில் மட்டக்களப்பிலும் ஆரம்பமாகியது. நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற உண்ணாவிரதம் 6-10-73 மாலை 6மணிக்கு முடிவடைந்தது.

---

### இவ்வார நகைச்சுவை!

''நவம்பர் முதலாம் திகதி புதிய வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா சமர்ப்பிப்பார்'

—செய்தி:

---

## தேசியக்கொடி எரிப்பு வழக்கு தள்ளுபடி!

கடந்த வருடம் ஆவணி மாதம் 9ம் திகதி நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் கட்டப்பட்ட தேசியக் கொடியை அறுத்துத் தீயிட்டார் என நெடுங்கேணி த. ம. தேவேந்திரன் (இந்திரன்) எனும் இளைஞன் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு வழக்கு தள்ளுபடியானது. இக் குற்றச்சாட்டு, நெடுங்கேணி மகாவித்தியாலயத்தின் அப்போதைய ஆசிரியரும், தற்போதைய மகா வித்தியாலய அதிபரும்—கம்யூனிஸ்ட் கட்சி நெடுங்கேணிக் கிளைத் தலைவருமான திரு. பொ. சந்திரசேகரியினால் சாட்டப்பட்டு, பிரிவுக் காரியாதிகாரியினால் முல்லைத்தீவு நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தேவேந்திரன் சார்பில் வழக்கறிஞர் திரு. வின்சென்ற் பாலசிங்கத்தின் அனுசரணையுடன், வழக்குரைஞர்கள் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம் மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் ஆஜரானார்கள்.

இவ்வழக்கைப் பார்வையிட — வவுனியா — ஒட்டுசுட்டான் — நெடுங்கேணி— புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இருந்து பெருந்திரளானோர் வந்திருந்தனர். முல்லைத்தீவு பட்டணசபைத் தலைவர் திரு. எம். எஸ். பஸ்தியாம்பிள்ளை வழக்கு முடிவுற்றதும் திரு. தேவேந்திரனை வரவேற்றுப் பாராட்டினார்.

---

## சட்டமறுப்பு தொண்டர்கள் பட்டியல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

**மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பங்கு பற்றியோர் பெயர்கள் வருமாறு:-**

(74) செ. இராசதுரை, இரண்டாம் குறுக்குத் தெரு மட்டக்களப்பு, (75) மு. மாணிக்கம், 39 லேக் வீதி, மட்டக்களப்பு (76) பொ. மாணிக்கவாசகம், செங்கலடி, ஏறுவூர், (77) சி. மூ. இராசமாணிக்கம் கழுவாஞ்சிக்குடி (78) பூ. நடேசானந்தம், மட்டக்களப்பு (79) செ. கருணாநிதி, மட்டக்களப்பு (80) சு. வாமதேவன் மட்டக்களப்பு, (81) வே. தேவராசா, மட்டக்களப்பு.

மூதூரிலிருந்து பங்கு பற்றிய தொண்டர்களின் பெயர்கள் வருமாறு:— (82) அ. தங்கத்துரை கிளிவெட்டி மூதூர், (83) கே. செல்வராசா மூதூர் (84) எ அ. பேருச்மெ. வாஸ், மூதூர் (85) பொ. சுந்தரமூர்த்தி. தலைவர் கிராமசபை, கட்டைபறிச்சான், (86) பி. விநாயக மூர்த்தி தலைவர் கிராமசபை, கிளிவெட்டி (87) நி. யோகேந்திரன், பட்டித்திடல், தோப்பூர் (88) என். முத்துராசா, புதுக்குடியிருப்பு தம்பலகாமம் (89) ஆர். வீரசிங்கம். ஆலங்கேணி மூதூர்.

திருக்கோணமலையிலிருந்து சட்டமறுப்பில் பங்கு பற்றிய தொண்டர்கள். (90) பா. நேமிநாதன், பிரதான வீதி திருகோணமலை, (91) திருமதி. பா. நேமிநாதன், பிரதான வீதி திருக்கோணமலை (92) ஸ்ரீ லோகேஸ்வரன், 53, கல்லூரி வீதி, திருகோணமலை, (93) பி. லோகேஸ்வரன் 25.9, வெலின்டன் அடை வீதி, திருகோணமலை. (94) டொ. சிறீஸ்கந்தராசா, 1.20 [illegible] வீதி, திருகோணமலை. (95) செ. கருணானந்தசாமி, 14, 4-ம் குறுக்குதெரு, திருகோணமலை (96) எம். நடராசா, பைக் வீதி, திருக்கோணமலை. (97) மு. அமரசிங்கம், 17, கால்கிசன் வீதி, திருகோணமலை.

**வவுனியா மாவட்டத்திலிருந்து தடயால் சட்டத்தை முறித்த தொண்டர்களின் எண்ணிக்கை பத்தொன்பது ஆகும். அதில் எனக்குக் கிடைத்திருக்கும் தொண்டர்களின் பெயர் விபரம் வருமாறு:—**

(98) எக்ஸ். எம். செல்லதம்பு, வவுனியா (99) எம். சிற்றம்பலம் வழக்கறிஞர், வவுனியா (100) என். சுப்பிரமணியம் முன்னாள் ப. ச. தலைவர், வவுனியா (101) வி. ரீ. சுப்பிரமணியம் முன்னாள் ப. ச. உபதலைவர், வவுனியா (102) எம். பி. இராசநாயகம், ஓமந்தை (103) கே. சிவசுப்பிரமணியம் எல்லப்பர் மருதங்குளம் வவுனியா (104) பீட்டர் பொன்னுவன், ம. வா. மு. தலைவர், நெடுங்கேணி (105) எம். நல்லதம்பி, கோவில் குளம், வவுனியா (106) கே. நவரத்தினம், கோரமோட்டை நெடுங்கேணி.

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

---

## தோட்டத் தொழி... 

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டக் குடும்பத்தின் மாத வருவாய் ருபா 211 ஆகத்தான் இருக்கிறது. செலவோ இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என அதிகரித்துள்ளது. அப்படிப் பார்த்தால் ஒரு தொழிலாளரின் குடும்பத்திற்கு மேலதிகமாக ரூ. 100வரை தேவைப்படுகின்றது.

ஒரு ருத்தல் மாவை 47 சதமாக வாங்கிய தொழிலாளி, அக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் ஒரு ருத்தல் மாவுக்கு 70 சதம் கொடுக்கவேண்டும். ஒருவருக்கு மரவள்ளியை உற்பத்தி செய்ய 6 மாதங்கள் வேண்டும். வற்றாளையை உற்பத்திசெய்ய 4 மாதங்கள் வேண்டும். நெல்லை உற்பத்திசெய்ய 6 மாதங்கள் வேண்டும். அதற்குள் என்ன செய்வது? காற்றையும் பச்சைத் தண்ணியையும் குடித்து வாழ்வதா; கொழும்பிலுள்ளவர்களுக்குத் தண்ணீர் தானும் கிடைக்கவில்லை. மார்கழி மாதத்தில் தோன்ற வேண்டிய, ஏழரை நாட்டுச் சனியன் அதுதான் 'தூமகேது' இப்பொழுதே இங்கு தோன்றிவிட்டது.

மலையகத்தலைவர்கள் தமது தொழிலாளருக்கு ஏற்பட்டிருக்கும் மிகப் பெரிய உயிர் போகும் நெருக்கடியைத் தீர்த்துவைக்க காலம் காத்திருந்தால், முடிவு பட்டினிச் சாவுதான். அரசு தன் பதவியைக் காப்பாற்றவேண்டில் பட்டினியைப் போக்க வேண்டும். சினந்தருத்த முக்கு கிரித்தாலும் ஒட்டாது என்பதைத் தலைவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

## தந்தையின் தொ

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொருவனும் பெருமை கொள்ளாமலிருக்க [illegible]யுமா?

இந்தப் பெருமித உணர்ச்சியுடன், பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கலைவிழா காண்போமா?

இந்த இடத்தில் நமது கவிஞா ச. வே. பஞ்சாடசரத்தின் கவிதை ஒன்றை வாசகர்களின் ரசனைக்கு விருந்தாக்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அரிசிக்காப்பு பெற்ற
அதிக பலம் பயன்படுத்தி
அரசியற் சட்டம் மாற்றி
அரிசி, மா, சீனி விலை
இரு மடங்கு முட்மடங்காய்
ஏற்றிவைத்து அரிசியையும்
அரைப்படியாய் ஆக்கிவிட்டு
ஆட்சிசெய்யும் நாசரிக
அரசியலை பார்த்துவக்க
ஆண்டவா நீ
வரவேண்

# தந்தையின் தொகுதியில் தமிழர் பாசறை (4)

சுபாஸ் சந்திரபோஸா? அவர் எப்படி தமிழரசு மாநாட்டுக்கு வந்தார்? அப்படியானால் அவர் உயிருடன் இருப்பதாக கூறப்படுவது உண்மைதானா? அவர் விமான விபத்தில் சிக்கி இறக்கவில்லையா? சொல்லாமல் கொள்ளாமல்— திடுதிப்பென்று சுபாஷ் எப்படி தமிழரசு மாநாட்டுக்கு வருகை தந்திருந்தார்? அது மட்டுமன்றி — அஹிம்சை நெறியில் நம்பிக்கை கொண்ட தமிழரசுக் கட்சியின் மாநாட்டில், அதில் நம்பிக்கையற்ற சுபாஷ் சந்திரபோஸ் எப்படி கலந்து கொண்டார்? என்பன போன்ற பல கேள்விகள் என் அருமை வாசகர்களின் உள்ளங்களின் கடந்த ஒரு வாரமாக எழுந்து கொண்டிருக்கலாம்!

சுபாஷ் சந்திரபோஸ்— அஹிம்சை வழியில் நம்பிக்கை இல்லாவிடினும் — ஆயுதப்போராட்டத்தின் மூலமாவது இந்திய சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற தணியாத ஆவல் கொண்ட விடுதலைத் தளகர்த்தர். எனவே, சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள செல்லவேண்டிய பாதை எது என்பதில் கருத்து வேறுபாடு இருப்பினும், அடிப்படை நோக்கில்—சுதந்திரம் நம், பிறப்புரிமை என்ற குறிக்கோளில் — சுபாஷ் சந்திரபோஷுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் நெருக்கமான உறவும் ஒன்றுமையும் உண்டு. எனவே சுபாஷ் சந்திரபோஸ் நமது விடுதலைப் பாசறையின் மாநாட்டில் கலந்துகொண்டாலும் சரி— கலந்துகொள்ளாவிட்டாலும் சரி — அவருடைய வீர சுதந்திர உணர்வுகொண்ட ஆத்மா, நம் விடுதலை இயக்கத்தை ஆசீர்வாதித்துக் கொண்டிருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை!

அப்படியானால் சுபாஷ் சந்திரபோஸ் நமது மாநாட்டில் பேசினுர் என்று சென்ற வாரம் நான் எழுதியிருந்தது பொய்யா என்று கேட்கிறீர்களா? பொய்யில்லை — தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் தமது தலைமையுரையைப் படித்துக்கொண்டிருக்கும் போது, அதைக் கேட்டுக்கொண்டிருந்த பொது மக்கள் தமக்குள் பேசிக்கொண்டிருந்ததை ஆதாரமாகக்கொண்டுதான் நான் அவ்வாறு குறிப்பிட்டேன்.

நாவலர் அமிர்தலிங்கம் அவர்களின் எடுப்பான தோற்றமும் மிடுக்கான நடையும், துடிப்பான பேச்சும், சுபாஷ் சந்திரபோசின் தோற்றத்தையே நினைவூட்டுவதாக பலரும்பேசிக்கொண்டதை என் காதாரக்கேட்டேன். என்ன இவர்கள் இப்படிக் கூறுகிறுர்களே என்று நானும் அமிர் அவர்கள் தமது தலைமையுரையை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது அவரை ஒரு நோட்டம் விட்டேன்.

உண்மைதான். மூக்குக் கண்ணுடியுடன் பார்க்கும் போது — தலையில் 'ஜெய்ஹிந்து' பொறிக்கப் பட்ட தொப்பி ஒன்றைக் காணவில்லை என்பதைத் தவிர — மற்றப்படி, அமிர்தலிங்கத்தின் தோற்றத்தில் சுபாஷ் சந்திரபோசின் 'சாயல்' படிந்திருக்கக் கண்டேன்!

சாயலில் மட்டுமல்ல — கொள்கையுறுதியிலும், தீவிர விடுதலை உணர்விலும், தன்னம்பிக்கையிலும், எடுத்ததை முடிக்கவேண்டுமென்ற திண்மையிலும், தியாக சிந்தையிலும் சுபாஷ் சந்திர போசுக்கு இளைத்தவரல்லர் திரு. அமிர்தலிங்கம் என்பதை தமிழ்க்குலம் நன்கு அறியும்.

நாவலரின் தலைமையுரை, இந்நாட்டுத் தமிழினத்தின் அரசியல் வரலாற்றை எடுத்துக்காட்டும் காலக்கண்ணுடியாக — இன்றைய அவல நிலையை போக்குவதற்கு வழி சொல்லும் அறிவுப்பெட்டகமாக அமைந்திருந்தது.

தொண்டர்களைப்பற்றி — தியாகிகளைப் பற்றி — எப்பொழுதும் சிந்திப்பவனே உண்மையான தலைவன். நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் தமது தலைமையுரையின் துவக்கத்திலேயே, வெலிக்கடையிலும், நீர்கொழும்பிலும், யாழ் கோட்டையிலும் உள்ள சிறைச்சாலைகளில் தமிழ் இனத்தின் வாழ்வுக்காக — தங்கள் வாழ்வை அழித்துக்கொண்டு — அடிகளையும், உதைகளையும் தாங்கிக்கொண்டு — தவம்செய்து வரும் தமிழ் இளைஞர்களை— தமிழ்ஈழத்தின் தங்கத் தம்பிகளை நினைவுகூர்ந்து, அவர்கள் உடலின் மீது பட்ட அடி ஒவ்வொன்றும் — ஒவ்வொரு தமிழன் மீதும் விழுந்த அடியென்றே கருதப்படவேண்டும்—என்று குறிப்பிட்ட போது — 'ஒரு தமிழன் தமிழர்க்காய் உயிர் வாழ்கின்ருன் — உயிர் வாழ்வோன் தமிழர்க்கேதனை ஈகின்ருன்' என்ற பாரதிதாசனின் பாடலே என் நினைவுக்கு வந்து என்னை மெய்சிலிர்த்திட வைத்தது.

தமிழ்த்தேசிய இனத்திற்கு எதிரே இன்று இருக்கின்ற ஒரே வழி—தமிழர் கூட்டணியினரும் ஏற்றுக்கொண்டிருக்கின்ற வழி—தமிழ் ஈழத்துக்கு தன்னுட்சியை அமைத்துக்கொள்வது தான் — என்று அவர் குறிப்பிட்ட போது எழுந்த கரகோஷம் பல மணித்துளிகள் நீடித்தன.

ஒத்துழையாமையிலும் — சாத்வீக சட்டமறுப்பிலும் இறங்கிபல்லாயிரக்கணக்கில் சிறை சென்று — கண்ணீரும் செந்நீரும் சிந்தி சுதந்திரத் தமிழ் ஈழத்தை உருவாக்குவோம் வாருங்கள் என்று தமிழினத்துக்கு அறை கூவல் விடுத்த நாவலர், தமிழ் இளைஞர்களை நோக்கி, உத்தியோகம் பெற்றுத்தருவோம் — சலுகைகள் தருவோம்என்று சில சில்லறைத் தேவதைகளைப் போல அழைக்கவில்லை.

பொலிசாரின் இடி — பட்டாளத்தினரின் இடி — சிறை வாழ்க்கை, துன்பம், சில சமயம் வீரமரணம் — இவற்றையே உடனடியாகத்தருவோம் — இவற்றைத்தாண்டிச் சென்றுலே விடுதலை பெற்ற புதிய தமிழகத்தை காணமுடியும் என்று கூறிய போது—அவற்றை ஏற்றிட நாம் தயார், தயார் — எந்த விலை கொடுத்தும் விடுதலையைப் பெறுவோம் — என்று தமிழ் இளைஞர் சமுதாயம் ஆரவாரம் செய்து வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்!

நாவலர் அமிர்தலிங்கம் அவர்களின் உணர்ச்சியும், அரசியல் முதிர்ச்சியும் நிறைந்த தலைமையுரை—தமிழினத்தைப் பிடித்திருக்கின்ற அரசியல் நோயையும், அந்த நோயின் மூலகாரணத்தையும், அந்த நோய் தீருவதற்குரிய மருந்தையும் அந்த மருந்தை உருவாக்குவதற்கு வேண்டிய 'பிரிஸ்கிரிப்ஷனை'யும் உள்ளடக்கியதாக அமைந்தது.

இதையடுத்து — மேடையிலிருந்து சிம்மக்குரலொன்று கணீரென்று எழுந்தது. அந்தக்குரல் தமிழ் சமுதாயம் நன்கு அறிந்த குரல்—பிளவுபட்டுக்கிடந்த தமிழர் சமுதாயம் ஒன்று பட்டுவிட்டதென்ற உண்மையை உலகெங்கும் உணர்த்திக்கொண்டிருக்கும் குரல்!! ஆம் அந்த முடைய உடுப்பிட்டி சிவாவின் உணர்ச்சி மிகு குரல்தான் அது!

தமிழ்த்தேசிய இனம் ஒன்றுபட்டுவிட்டது: இனி அதை எவருமே பிரித்திட முடியாது; என்பதை நம் இனத்தின் எட்டர்பர்களுக்கும், எதிரிகளுக்கும் உணர்த்துவது போல — தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் உள்ள நிறைவுடன் கலந்துகொள்ள வந்திருந்த தமிழ் காங்கிரசின் பொதுச் செயலாளர் உடுப்பிட்டி சிவா, புதிய தலைவர் அமிர்தலிங்கம் அவர்களைப் பாராட்டி எழுச்சியும், உணர்ச்சியும், உறவும் உரிமையும் பொதிந்த உரையொன்றை நிகழ்த்தினுர்.

திரு. சிவசிதம்பரத்தின் குரலில்—தமிழர் நாம் ஒன்றுபட்டுவிட்டோம்— நம்மை இனி யாராலும் பிரித்திட முடியாது என்ற வைராக்கியம் தொனித்தது — உரிமையுணர்வும் பாச உணர்வும் இழையோடியது!

1949ம் ஆண்டு தமிழ் காங்கிரசுக்கட்சியில் பிளவு ஏற்பட்டு — தமிழரசுக்கட்சி தோன்றிய பின்னர் — 17 ஆண்டுகள் கழித்து இப்பொழுதுதான் முதன் முதலாக தமிழரசுக்கட்சியின்மாநாட்டில் தமிழ் காங்கிரஸ் கட்சியினர் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறுர்கள். இந்த வரலாற்று சாதனையை உருவாக்கி, பெருமையைத் தட்டிக்கொண்டது காங்கேசன்துறை மாநாடு!

எங்கள் பகைவர் எங்கோ மறைந்திட — இத்தகைய தோழமை உணர்வும், ஒற்றுமையும் மேலும் வலுப்பட வேண்டும் என்று தலைவர் அமிர்தலிங்கம் தமது தலைமையுரையில் கூறியதை ஆமோதித்து, உடுப்பிட்டி சிவா பேசியபோது மக்கள் அதை ஆரவாரம்செய்துவரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்!

தமிழரசுக்கட்சியின் புதிய தலைவருக்கு தன் சார்பிலும் தனது கட்சியின் சார்பிலும் வாழ்த்துக்களைக் குவித்த உடுப்பிட்டி சிவா அவர்கள், திரு. அமிர்தலிங்கம் அவர்களை நோக்கி, "உங்கள் தலைமையில் தமிழினத்தின் ஒற்றுமை மேலும் வலுப்பெறும்; தமிழினமும் விடுதலைபெறும்" என்று நம்பிக்கை தெரிவித்த போது எல்லோருடைய கண்களிலும் மகிழ்ச்சிக்கண்ணீர் வழிந்ததைக்கண்டேன்!

ஆம் — தமிழினம் வாழ்ந்தால் இனி ஒன்றுக வாழும்— வீழ்ந்தாலும் ஒன்றுகவே வீழும்—நமக்குள் பிளவில்லை பேதமில்லை — பொருமையில்லை — பொச்சரிப்பில்லை— என்பதை எண்ணிப்பார்க்கும் போது எத்துணை ஆனந்தம் ஏற்படுகிறது நமக்கு!



உடுப்பிட்டி சிவசிதம்பரம்

ஒரு இலட்சியத்தின் அடிப்படையில் சேர்ந்து இயங்கும் போதுதான் உண்மையான ஒற்றுமை உருவாக்கும்; இதைத்தான் தமிழரசுக் கட்சி, நீண்டநெடுங்காலமாக கூறிவந்திருக்கிறது — அத்தகைய ஒற்றுமை இன்று தமிழர் கூட்டணி மூலம் உருவாகிவிட்டது கண்டு தமிழன்

(6-ம் பக்கம் பார்க்க)

---

# உணவுற்பத்தியில் ஈடுபடுவதற்கு தோட்டத் தொழிலாளர்களுக்கும் காணி வழங்கப்பட வேண்டும்!

## தேசிய அரச பேரவையில் செல்லத்தம்பு!

மலையகத் தோட்டங்களிலுள்ள தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கும் கமத்தொழில் காணி மசோதாவின்கீழ் நிலம் வழங்கி, அவர்களையும் விவசாயத்திலிடுபடுத்துமாறுதேசிய பேரவையில் மேற்படி மசோதா மீது உரையாற்றிய வவுனியா பா. உ. செல்லத்தம்பு காணி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தமது உரையில் கூறியதாவது:-

1957ம் ஆண்டு நெற்காணிச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது எமதுகட்சி(தமிழரசார்) அதனை எதிர்த்துப் பேசியதுடன். அதற்கு எதிராக வாக்களிக்கவும் செய்தார்கள். அதற்கு முக்கியமான காரணம் உண்டு.

அந்த நெற்காணிச் சட்டத்தில் நாடற்ற மக்கள் விவசாயத்துறையில் ஈடுபட வகை செய்யப்படவில்லை. அவர்களுக்குப் போதிய சலுகைகளும், வழங்கப்படவில்லை. அவர்கள் நிலங்களைப் பெற்றுக்கொள்வதும் தடுக்கப்பட்டிருந்தது. இதனுலேயே தமிழரசார் அம் மசோதாவை வன்மையாக எதிர்த்தனர்.

இந்த மசோதாவிலும் அத்தகைய ஷரத்துக்கள் உண்டு. ஆனுல் இன்று நிலைமைவேறு. 1957ல் இருந்த நிலையையும், இன்றைய நிலைமையும் முற்றும் மாறுபட்டுள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி குறிப்பிட்ட தொகையினர் இந்த நாட்டின் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படவிருக்கின்றனர். அதே போல் மற்றொரு தொகையினர் திருப்பி அனுப்பப்படவிருக்கின்ற [illegible] இந்த சட்டத்தின்படி சகல உரிமைகளையும் பெறத் தகுதி உடையவர்களாகின்றுர்கள்.

எனினும் காணி, விவசாய அமைச்சரிடம் ஒரு கோரிக்கை விடுக்க விரும்புகின்றேன். இன்று நாட்டில் பெரும் உணவு நெருக்கடி உண்டு. இந்த நெருக்கடியைப் போக்கும் பொருட்டு உணவு உற்பத்தியில் ஈடுபடும் பொருட்டு பெருந்தொகையில் உள்ள தோட்டத்தொழிலாளர்களின் உட



லுழைப்பை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

அவர்களில் இலங்கைப் பிரஜைகளாகுபவர்கள் இந்தச் சட்டத்தின்படி அவர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளட்டும், இந்தியாவுக்குப் போவோர் தாங்கள் போகும் காலம் வரையும் உணவுற்பத்தியில் ஈடுபடட்டும், அதுவரையும் அவர்களுக்கு இச்சட்டத்தின் கீழான சகல உரிமைகளும் கிட்டட்டும். அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதும் தாஞகவே அவர்களின் உரிமைகள் பற்றிய பிரச்சினை நீங்கும்.

இந்த மனித சக்தியை உபயோகித்துக்கொள்ளவேண்டியது அவசியம். எனவே நாடற்ற மக்களையும் உணவு உற்பத்தியில் ஈடுபடுத்த காணி, விவசாய அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தச்சட்டத்தின் சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்கவேண்டும்.

இன்று இந்த நாட்டில் நில உச்சவரம்பு, வீடு உச்சவரம்பு, வருமான உச்சவரம்பு ஆகியவைகள் உண்டு. தனியார் ஒருவருக்கு 25 ஏக்கர்களுக்குமேல் காணி வைத்திருக்கமுடியாது என்ற நில உச்சவரம்புச் சட்டம் இந்த நாட்டில் இருக்கும்போது விவசாயக் கூலிக்காரர்களுக்கு அந்த உச்சவரம்பு கிடையாது. அவர்கள் எத்தனை ஏக்கர் நிலத்தை வேண்டுமாஞலும் கூலிக்கு எடுத்து அறுவடை செய்யலாம்.

எமது பகுதியைப் பொறுத்தமட்டில் சிலருக்குநான்கு, ஐந்து ஏக்கர்களுக்குமேல் சொந்த நிலம் கிடையாது. ஆனுல் விவசாயக் கூலிக்காரர்களுக்கு 80 அல்லது 90 ஏக்கர்களுக்குமேல் கூலி நிலமுண்டு. எனவே இதன்மூலம் எமது சமூகத்தில் விவசாயக் கூலிக்காரர்கள் என்ற புதிய முதலாளித்துவம் உருவாகி வருகின்றது.

இந்த நிலையை மாற்றி அமைக்காவிட்டால் நில உச்சவரம்புச் சட்டத்தின் நோக்கமே சிதைந்துவிடும். அந்தச் சட்டம் செயலற்றதாகிவிடும். தோல்வியில் முடிந்துவிடும்.

எனவே இந்த நிலைமையை கருத்திற்கொண்டு ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்துக்கு மேல் கூலிக்கு விவசாயக் காணிகள் பெறக்கூடாது என்று உச்சவரம்பு விதிக்கப்படவேண்டும். இந்தமுறையில் கமத்தொழிற் காணிகள் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்றும் அவர் தமதுரையில் வலியுறுத்திஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


## 7வது வாரம் செல்லமகால்

தியாகங்கள் பலவகை!
காதலுக்காக முடிதுறந்து மன்னர்களும் தியாகம் புரிந்தனர் ஆனால்! இவள் செய்த தியாகமோ எந்த ஒரு பெண்ணும்இழக்கத்துணியாததை அவள் தியாகம் செய்தாள்! ஏன்? யாருக்காக?

வின்சர் (யாழ்ப்பாணம்) நெல்சன் (திருமலை)

கே. பாலசந்தரின்

# அரங்கேற்றம்



எஸ். வி. சுப்பையா
சிவகுமார்
சசிகுமார்
ஜெமினிமகாலிங்கம்

பிரமிளா
என். எம். ராஜம்
சுந்தரிபாய்
ஜெயசித்ரா

பெரியவர்களுடன் வரும் இளையவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

## 5வது வாரம் கெயிட்டி

ஜெய்சங்கர், லட்சுமி,
முத்துராமன், நிர்மலா,
சந்திரபாபு, விஜயலலிதா
மேஜர் சுந்தரராஜன் மனோகர்
நடித்த

காதலித்தவனை மணக்க முடியாது கட்டியவனை கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என வாழ்ந்த ஓர் கற்புக்கரசியின் கதை.

# கண்ணன் வருவான்

● உங்கள் அபிமான நட்சத்திரங்கள் நடித்தது!
● உணர்ச்சிமயமான கதையமைப்பு கொண்டது!
● உள்ளத்தை தொடும் பாடல் நிறைந்தது!

பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க குறிப்பிட்ட சில நாட்களுக்கு
சென்ட்ரல் (மருதானை) திரையில் காட்சிதருகிறான்

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, அசோகன், சோ. —நடித்த—

# மாட்டுக்காரவேலன் (ஈஸ்ட்மென் கலர்)

எதிர்பாருங்கள்
அக்டோபர் 18 முதல்

## "பெத்தமனம் பித்து"

## 3-வது வெற்றி வாரம்!

கெப்பிட்டல் திரையில்

எனது பிள்ளைக்கு எப்படி எடுத்துரைப்பேன்
(HOW DO I TELL MY CHILD)
(கலர்)

(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மாத்திரம்)

அடுத்த வெளியீடு

கே. ஆர். விஜயா, நாகேஷ் நடித்த

# சொர்க்கம் (ஈஸ்ட்மன் கலர்)

## கிங்ஸ்லி (கொழும்பு)

சிவாஜிகணேசன், சரோஜாதேவி,
எம். ஆர். ராதா
—நடித்த—

# பாகப்பிரிவினை
(புதிய கொப்பி)

அடுத்த வெளியீடு

ஜெமினிகணேசன், ஜெயந்தி,
—நடித்த—
கே. பாலசந்தரின்

# புன்னகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் ஒக்டோபர் மாதம் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.